உ

இரத்தோட்டை

அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின்

# அருளாட்சியும், ஆலய வளர்ச்சியும்



மாத்தளை பெ. வடிவேலன்

வெளியீடு: இரத்தோட்டை, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

இரத்தோட்டை

அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின்

# அருளாட்சியும், ஆலய வளர்ச்சியும்

## சமர்ப்பணம்

இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய
வளர்ச்சிக்காக ஆரம்ப காலம் முதல்
இன்றுவரை அரும்பணிகள் புரிந்து
தொண்டாற்றிய அடியார்கள்
அனைவருக்கும்
இந்நூல் சமர்ப்பணம்

## மாத்தளை பெ. வடிவேலன்

இந்நூல் வெளியீட்டு வைபவம், நூல்விற்பனை
என்பனவற்றில் கிடைக்கப்பெறும் நிதி அனைத்தும்
ஆலய திருப்பணிக்கே வழங்கப்படும்.

வெளியீடு
இரத்தோட்டை
அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான்
ஆலய பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் தலைப்பு : ''இரத்தோட்டை
ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமானின்
அருளாட்சியும் ஆலய வளர்ச்சியும்''

நூலாசிரியர் : மாத்தளை பெ. வடிவேலன்
அம்பாள் இல்லம், நோர்த்-மாத்தளை,
கவுடுப்பெலல்ல, மாத்தளை,
ஸ்ரீ லங்கா.

முதற்பதிப்பு : ஏப்ரல் - 2007

விலை : ரூபா. 200/=

அச்சுப்பதிப்பு : *Vj கிராபிக்ஸ் & பிரிண்டர்ஸ்*
மாத்தளை.
தொ.பே.: 066-5674324, 077-6253632.

வெளியீடு : இரத்தோட்டை அருள்மிகு
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
பரிபாலன சபை.

Tittle : RATTOTA,
SRI SELVAVINAYAGAP PERUMANIN
ARULATCHIYUM, VALARCHIYUM.

Author : MATALE P. VADIVELAN (BA Cey.)
"Ambal Illam" Northmatale,
Kawdupelella, Matale,
Sri Lanka.

1ST Print : APRIL - 2007

Price : Rs. 200/=

Printed By : *VJ Graphics & Prints*
Matale.
Tel : 066-5674324 / 077-6253632.

Published By : ADMINISTRATIVE BOARD
Rattota Sri Selva Vinayagar Temple.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இறைவன் அங்கிங்கெனாதபடி, எங்கும் நிறைந்தவன். எனினும் ஆன்மாக்களுக்கு அருள்புரிய வேண்டித்திருமேனிகளை இடமாகக்கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளிக் காட்சித்தருகின்றான். இறைவனை எங்கும் காணலாம் என்று கூறுவது முற்றிலும் உண்மை; எங்கும் நிறைந்த இறைவனை, எல்லா மக்களும் காணும் பக்குவமுடையவர்கள் அல்லர்.

எனவேதான் ஆலய வழிபாடு அவசியமாகின்றது. நம்முன்னோர்கள் ஆலயங்களை அமைத்ததோடு, அவற்றில் நித்திய, நைமித்திய கிரியைகளையும் சிறப்பாக நடாத்தினர். அத்தோடு ஆலயங்களை நடுவாகக்கொண்டு நம் கலை,கலாசார பாரம்பரியங்களையும் வளர்த்தனர்.

இவ்வாறு நம் நல்வாழ்விற்கு அடிநாதமான ஆலயங்களின் வரலாற்றினையும் அங்கு எழுந்தருளி அருளாட்சிபுரியும் இறைவனின் திருவருள் பெருமைகள் பற்றியும், இத்தெய்வீகத் திருப்பணிக்கு வித்திட்டு அரும்பணிகள் ஆற்றிவரும் திருப்பணிநாயகர்கள் பற்றியும் மெய்யடியார்களைப் பற்றியும் ஆவணப் பதிவுகள் செய்யப் படவேண்டியது அவசியமானதாகும்.

மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை நகரில் எழுந்தருளி அருளாட்சிபுரியும் ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமானின் பெருமைகள் பற்றியும், ஆலயத்தின் வளர்ச்சியினையும் மற்றும் மலையகத் தமிழர்களின் பண்பாடு, ஆலய வழிபாடுகள் பற்றியும் மலையக எழுத்தாளர் திரு. பெ.வடிவேலன் அவர்கள் எழுதிய இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலை வெளியிடும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. கா.கருப்பையா உட்பட, பரிபாலனசபை உறுப்பினர்களுக்கும், இரத்தோட்டை வாழ் பொதுமக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அனைவருக்கும் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் அருளாசி கிடைப்பதாக!

**கி. விஜயபாஸ்கர்**
**உரிமையாளர்**
***Vj கிராபிக்ஸ் அன் பிரிண்டர்ஸ்,***
**மாத்தளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயபரிபாலன சபைத்தலைவரின் ஆசிச்செய்தி

மலைநாட்டில் மாத்தளை மாவட்டத்தில் இயற்கை வனப்பும் இறைஉணர்வும் மிக்க இரத்தோட்டை நகரில் எழுந்தருளி எம்மையெல்லாம் காத்தருள்புரியும் அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் அருள்மழையானது சொல்லில் அடங்காத பேரின்பப் பெரும் மழையாகும்.

எம்பெருமான், செல்வவிநாயகரின் அருளால் அவரின் திருக்கோயில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தேவஸ்தான அந்தஸ்த்தினை எய்திவருகின்றது. தற்போது விமானம், ஸ்தூபி, கர்ப்பக்கிரகம் உட்பட அர்த்தமண்டபம், மகா மண்டபம், சபாமண்டபம், வசந்தமண்டபம் என்பனவற்றுடன் பல புதிய சந்நிதிகளும் உட்பிரவாகத்தில் அமைக்கப்படுகின்றன. எழுத்தாளரும் சமூகநல ஆர்வலருமான நண்பர் மாத்தளை பெ. வடிவேலன் எம். ஆலயத்தின் அறநெறிப்பாடசாலையின் வளர்ச்சி உட்பட பல இந்துசமயப் பண்பாட்டு அம்சங்களுக்கும், ஆலய வளர்ச்சிக்கும் எம்மோடு இணைந்து உறுதுணையாக நின்று செயல்புரிகின்றவர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சும், கலாசார அமைச்சும் இணைந்து செயல்புரிந்தவேளையில், அமரர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் கலாசார பிரதிநிதியாக இவர் என்னை நேரில் வந்து சந்தித்து, எம் கலாசார மண்டபத்திற்கு பிள்ளையார் சுழிபோட்டார். இன்று ஆலயத்தில் பல்வேறு பாரிய திருப்பணிகள் நடைபெறும் இவ்வேளையில் இவ்வருட சித்திரா பௌர்ணமி தேர்த்திருவிழாவின்போது "இரத்தோட்டை செல்வவிநாயகப்பெருமானின் அருளாட்சியும், ஆலய வளர்ச்சியும்" என்னும் வரலாற்று நோக்கில் அமைந்த நூலை எழுதி எம்மை மேலும் தெய்வீகத் திருத்தொண்டில் ஈடுபட ஊக்கமளிக்கின்றார். அவரின் முயற்சிகனிய செல்வ விநாயகப் பெருமானின் அருள்வேண்டித் துதிக்கின்றேன்.

**கா. கருப்பையா**
பரிபாலன சபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 01

"லெமோறியா" என்று அழைக்கப்படும் பெரும் நிலப்பரப்பில் குமரிக்கண்டம் உபகண்டமாக விளங்கியது. அக்கண்டத்தோடு தொடர்ந்திருந்த அவுஸ்திரேலியா கி.மு. பதினெட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தனிக்கண்டமாக பிரிந்து சென்றது. காலத்திற்கு காலம் ஏற்பட்ட கடல் கோள்களினால் குமரிக்கண்டமானது தனது நிலப்பரப்பை இழக்கலாயிற்று. கி.மு.5000 ஆண்டு தொடக்கம் இருபத்திரண்டு நூற்றாண்டுகளில் குமரிக்கண்டத்தில் சிறப்புடன் விளங்கிய பாண்டிய நாடு பாடிப்படியாக ஆழ்கடலினுள் அமிழ்ந்துவிட்டது.

முதற் சங்க காலத்தில் தென் மதுரையும், இரண்டாம் சங்க காலத்தில் கபாடபுரமும் தலநகரங்களாக விளங்கி தமிழை வளர்த்தன. இவற்றையும் கடல் கொண்டு விட்டது. கடல் கொண்ட லெமூறியாக் கண்டம் இந்தியாவிற்கு தெற்கேயிருந்தது. இதன் நிலப்பரப்பு ஏழுநூற்றுக் காவதம் என்றும் இதில் ஏழ் தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ் பின்பாலை நாடு, ஏழ் குறும்பனை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகரை நாடு..., என் நாற்பத்தொம்பது நாடுகளும் மற்றும் குமரி, கொல்லம் முதலிய பல மலை நாடுகளும் இருந்தன். இக்கண்டத்திற்கு ப∴றுளியாறு தெற்கெல்லையாகவும் குமரியாறு வடக்கெல்லையாகவும் அமைந்தன. பேராசிரியர் ஸ்ரீநி வாசகராவர் அவர்கள் கி.மு.30000 ஆண்டு முதல் கி.மு.1715-ஆம் ஆண்டுவரையுள்ள காலப் பகுதிக்குள் தென் மதுரைதமிழ்ச் சங்கம், கபாடப்புரம் தமிழ் சங்கம், வடமதுரைத் தமிழ்ச் சங்கம், லெமோறியா கண்டத்தின் பேரழிவு என்பனவற்றையும், அங்கு வாழ்ந்த திராவிட மரபினரின் வம்சாவளி கால எல்லைகளையும் வரலாறு, பண்பாடு, விஞ்ஞானம், இலக்கியம், ஐதீகம் ஆகியவற்றினூடாக அட்டவணைப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ப.்.றுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்க" என்பது இலக்கிச்சான்றாகும். கடல்கொண்ட குமரி ஆற்றங்கரையில் 'புஸ்பஹானி' என்னும் தெய்வத்துக்கு கோயில் அமைந்திருந்தமையினையும் இதனோடு அமைந்திருந்த ஏழ் தெங்கநாடும், ஏழ்பனைநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடுகள் கடல்கோளினாள் அழிந்துபோயின என்பதை மணிமேகலை வாயிலாக அறியக்கிடக்கின்றது.

இந்திய தீபகற்பமும், இலங்கையும் லெமோறியா கண்டத்தின் எஞ்சிய நிலப்பகுதிகளே ஆகும். இலங்கை கி.மு. இரண்டாயிரத்துமுந்நூறில் இந்தியாவிலிருந்து பிரிந்தது என்பதை ஆய்வாளர் 'மெகஸ்தனீஸ்' (DUTTS CIVILISATION ANCIENTS INDIA) என்ற தனது நூலில் விளக்கியுள்ளார். ஸ்கொட் எலியட் (SCOT ELLIOT) என்ற ஆய்வாளர் தமது மறைந்த லெமொறியா (LOST LEMORIA) என்ற நூலில் மனிதனின் மிக மிகப் பழமையான நாகரீகம் தென்னிந்தியாவில் தான் இருந்தது. அதன் விரிவான நிலப்பகுதிதான் கடலில் மூழ்கிய 'லெமொறியா' என்கிறார். திரு. டோமினார்ட் (TOMINARD) என்ற அறிஞர் தென்னாசியாவின் மிகப்பழமையான பகுதி தென்னிந்தியாதான் என்று குறிப்பிடுகிறார்.

இதுபோல் பேராசிரியர் 'ராலே (Prof. Releieh) உலக வரலாறு (HISTORY OF THE WORLD) என்ற தனது நூலில் பெருவெள்ளத்திற்குப் பின்னர் (பிரளயம்) இந்தியாவில்தான் மனித இனம், முதன் முதல் தோன்றியது என்று நிறுவியுள்ளார். பிரித்தானியர் சங்கத்தின் தலைவரான சேர் ஜேன் எட்வன்ஸ் (SIR JONE EDVENCE) மனிதன் தென்னிந்தியாவில்தான் தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றான் என்கிறார். லெமொறியா கண்டத்தின் பேரழிவுக்கு முன்னர் இந்தியாவும், இலங்கையும் குமரிக்கண்டத்தின் நிலப்பகுதியாகவே இருந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தனி நாடாக விளங்கும் இலங்கை பண்டு முதல் திராவிட பாரம்பரியத்தினையும், சிவவழிப்பாட்டினையும் கொண்டதாக விளங்கியுள்ளது. இங்கு திராவிட நாகரீகமும் அவர்கள் பின்பற்றிய இந்து மதமும் தொன்மை வாய்ந்தவை. லெமொறியா கண்டத்தில் வாழ்ந்த திராவிடர்கள் நாகரீகம் மிக்கவர்களாக வாழ்ந்ததுடன், சமயம், பண்பாடு, வர்த்தகம் என்பவற்றிலும் மேலோங்கி விளங்கியுள்ளனர். அவர்கள் இந்து மத சாஸ்த்திரங்களையும், ஆலயங்களையும் கொண்டவர்களாக விளங்கினர்.

இந்த பண்பாட்டின் அடிச்சுவடும், மரபுசார்ந்த உள்ளுணர்வுமே இலங்கையிலும், இந்தியாவிலும் ஆலயங்களை நிறுவி வழிபாடு செய்ய மூலமாக அமைந்தன எனலாம். இதன் அடிப்படையிலேயே இன்றும் இந்தோனேசியாவில் நடைபெறும் சிவவழிபாட்டினையும் கொரியா நாட்டின் உள்ள சிவன் கோயில்களையும், ஷியாம் நாட்டில் முடிசூட்டு விழாவிழாவின்போது திருவெம்பாவை வரிகளை பாலியில் எழுதிப் படிப்பதையும் ஜாவா தீவில் கண்டெடுக்கப்பட்ட "கபால விநாயகர்" சிலை உட்பட பல்வேறு ஆதாரங்கள் மூலம் அறியலாம். நம் இலங்கை மணித்திருநாடு சிவபூமி என்பதை திருமூலநாயனார் திருமந்திரத்தில்,

மேரு நடுநாடிமிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கை குறியுறுஞ்
சாரும் திலைவனத்துதண்மா மலையத்தூடு
ஏறுஞ் சுழுமுனை இவைசிவ பூமியே

(திருமந்திரம் 2701)

மேற்குறித்தவாறு இலங்கைக்கும், பாரத நாட்டின் மேருமலைக்கும் இடைப்பட்ட பூமி பிரதேசம் முழுவதையும் "சிவபூமி" என்று இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலநாயனார் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். இலங்கையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருமலையையும் இணைத்து செல்லும் நடுக்கோடு தில்லைச் சிற்றம்பலத்துக்கும், பொதிகைமலைக்கூடாகவும் செல்கின்றது. இதனாலேயே மேருவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட பூமியை சிவபூமி என்றார் திருமூலர். இலங்கையின் திருக்கோணேஸ்வரம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் சிவஸ்தலமாக விளங்கிவருவதுபோல், தெற்கே மாத்தறை தேவேந்திரமுனைக்கு தென்பால் தொண்டீஸ்வரம் என்னும் சிவஸ்தலம் விளங்கிற்று.

இலங்கை இராமபிரானது திருப்பாதம் பட்ட புண்ணியபூமி. திருமால் ஈரடியால் மூவுலகலந்தபோது அவரின் பாதம் இலங்கையின் சிவனொளிபாத மலையிலேயே பதியப்பெற்றது என்பர். கலியுகவரதன், இலங்கை, கதிர்காமத்தில் சூரபத்மனை அழித்து வள்ளி தேவிக்கு அருள்கொடுத்தார். புராண இதிகாச காலத்துக்குப் பின்னர் இலங்கையிலும், இலங்கையின் மத்திய மலைநாட்டிலும் திராவிடப் பாரம்பரியம் செல்வாக்குடன் திகழ்ந்தமைக்கும், இந்து சமயமும், தமிழர்கள் சிறப்புற்று மேலோங்கி இருந்தமைக்கும் பௌதீக ஆதாரங்களும், பண்பாட்டு இலக்கியச்சான்றுகளும் நிறையவே உள்ளன.

1815 -இல் ஆங்கிலேயர் கண்டியை கைபற்றி இலங்கைதீவு முழுவதையும் தம் ஆட்சிக்குட்படுத்திய போது, கடைசியாக முடி இழந்த மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனே ஆவான். அக்காலப்பகுதில் மன்னன் மட்டுமன்றி செல்வாக்குமிக்க தமிழ் பிராதானிகளும், செட்டிமாரும், சோதிடர்களும், கலைஞர்களும் உட்பட படைவீரர்கள் குடும்பத்திரும் இருந்தனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இலங்கையில் இந்து மதம் சிறந்து விளங்கியுள்ளதுபோல், காலத்துக்கு காலம் பல சோதனைகளுக்கும் அது முகம் கொடுத்தே வந்துள்ளது. அரசியல், பொருளாதார சமூக மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டங்களில் பலவிதமான தெய்வ வழிபாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. ஆதியில் நிலவிய தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக பின்னர் வேரூன்றிய கண்ணகி, பத்தினி வழிபாட்டை காண்கின்றோம். "கடல்சூழ் இலங்கை கஜபாகு வேந்தனும்" - என்ற சிலப்பதிகார வரிசேரநாட்டில் நடைபெற்ற கண்ணகி விழாவில் ஈழத்து கஜபாகு மன்னன் கலந்துகொண்டு கண்ணகி வழிபாட்டை இங்கு ஆரம்பித்து வைத்ததை எடுத்துக்காட:டக்கின்றது.

இராஜாவளி, இராஜரத்னகார, கஜபாகத்தாவ, கோகில சந்தேஷிய ஆகிய நூல்களும் இதனை ஆமோதிக்கின்றன. பேராசிரியர் சி. பத்மநாதன் கி.பி. 800-1200 ஆகிய காலப்பகுதியில் இலங்கையின் சில பகுதியிலே பத்தினியை தெய்வமாக போற்றும் வழக்கம் நிலவியதாக குறிப்பிடுன்றார். கஜபாகு மன்னன் பத்தினி தெய்வ வழிபாட்டோடு, கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தோடும் தொடர்புபடுத்தப்படுகின்றான். கஜபாகு மன்னன் அமைத்த பத்தினி அம்மன் கோயில் சிலையும், விநாயகர் சிலையும், பிற தெய்வங்களின் சிலையும், யுத்தம் காரணமாக ஆலய வழிபாடு கைவிடப்பட நேர்ந்து, ஆலயம் அழிக்கப்பட்ட பின்னர் ஆலய சூழலில் அமைந்திருந்த குளத்தில் புதைக்கப்பட்டு பின்னர் ஸ்ரீ குருசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கண்டியில் ஸ்ரீ செல்வவிநாயகராக பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கி.பி.1552- இல் கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தை புனரமைத்தான். இம்மன்னன் காலந்தொட்டே புத்தரின் புனித தந்தம் அடங்கிய பேழை கண்டி பெரஹறாவின்போது இந்து கடவுளின் பவனியோடு எடுத்து வரும் வழக்கம் ஏற்பட்டதென கூறுகின்றனர். கண்டி ராச்சியத்தின் கடைசி மன்னனாக விளங்கிய கீர்த்தி ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் ஆட்சி காலத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவும், வர்த்தக, வெளிநாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு மொழியாகவும் இருந்துள்ளது. இம்மன்னன் கண்டி செல்வ விநாயகர் ஆலயத்துக்கு பல திருப்பணிகளை செய்துள்ளார். நம்நாட்டு பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களினதும் தேசிய சமய கலாசார விழாவாகவும் பிரமாண்டமாக நடாத்தபபட்டு வருகின்ற கண்டி பெரஹராவோடு கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பூஜைகளும் இன்றளவும் தொடர்புபடுத்தப் பட்டுள்ளமை ஒரு முக்கிய சிறப்பம்சம் எனலாம். ''றந்தோலி'' பெரஹரா அன்று இந்துக்கள் தலதா மாளிகைக்குச் சென்று பூசை வழிபாடுகளை செய்கின்றனர். இதுபோல் தலதாமாளிகையின் ''நிலமைகள்'' நீர்வெட்டு பெரஹரா போன்ற உற்சவ சடங்குகளின் போது கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் பூஜைகளையும் வழிபாடுகளையும் நடாத்துகின்றனர்.

ஆங்கிலேயர் மலைநாட்டைக் கைப்பற்றி பெருந்தோட்ட பயிர்செய்கையை ஆரம்பித்த பின்னர் மத்திய மலை நாட்டில் ஒரு புதிய யுகம் தோன்றியது. இந்த புதிய யுகம் மலை நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக தென்விந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தமிழ் மக்களின் வருகையோடு தொடங்கியது எனலாம்.

மலையகத்தின் வடக்கு வாயிலெனத்திகழ்வது மாத்தளை மாவட்டமாகும். தென்னிந்தியாவிலிருந்து கடலைக் கடந்து மன்னார், அரிப்பு, மாந்தை ஆகிய துறைகளில் காலூன்றிய மக்கள் வரன்டவலய வனாந்தரங்களுக்கூடாக கொடிய விளங்குகள் விஷஜந்துக்கள், காட்டுச் சுரம், அம்மை போன்ற நோய்களினால் பாதிப்புற்று நாலந்த கணவாயிற்கூடாக கால்நடையாக மாத்தளை பன்னாமத்தை வந்து சேர்கின்றனர். இவ்வாறு வந்த மக்கள் அன்று சிறு கோயிலாக விளங்கிய பன்னாமத்து அம்மனை தரிசித்து அங்கு தங்கி ஆசுவாசம் அடைந்து, மலைநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரிந்து சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை மலைப்பகுதியிலேயே வடக்கிலிருந்து ஈரவலய மலைநாடு தொடங்குகின்றது எனலாம். மாத்தளை குன்றுகளுக்கு சமாந்தரமாக வடகிழக்கிலும், தெற்கேயும் நக்கில்ஸ் மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. மாத்தளையிலிருந்து குறுகிய தொலைவில் அமைந்துள்ள இந்த மலைப் பகுதியில்தான் இறத்தோட்டை நகர் அமைந்துள்ளது. ஆதியில் "இராகஸ்தொட்ட" என்ற அழைக்கப்பட்ட இடமே இப்பொழுது இப்பெயர் பெற்றது என்பர். தென்கிழக்கில் அமைந்துள்ள மலைப்பிரதேச மன்னனது ஒற்றர்களும் மத்திய மலைநாட்டு குறுநில மன்னர்களும், ஒற்றர்களும் இரகசியங்களை பரிமாறிக்கொண்ட இடமே இராகஸ் தோட்ட என்போரும் ஊளர்.

இறத்தோட்டை பகுதி மலை வளமும் மண்வளமும் மிக்கது. மழைவளத்தோடு நீர்வளமும் நிறைந்து இதமான சீதோஷனம் உடையது. ஊட்டி, கொடைக்கானல் போல் உவந்த சுவாத்தியத்தை கொண்டது. தேயிலையும், செந்நெல்லும் செழித்து வளரும் சிறப்பினைக் கொண்டது. ஏலம், கராம்பு, சாதிக்காய், மிளகு ஆகிய வாசனைத் திரவியங்களும், வெற்றிலை, பாக்கு என்பனவற்றுடன் மா, பலா, வாழை, என்ற முக்கனிகளும் விளையும் பூமி, இப்பகுதியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பாரிய தேயிலை இறப்பர் கொக்கோ தோட்டங்கள் பல உருவாகின.

காடுகளை அழித்து, மலைமுகடுகளைத் திருத்தி சாலைகளை அமைத்து பாரிய, பணப்பயிர் தோட்டங்களை உருவாக்கிய மக்கள் தாம் குடியிருக்கும் தோட்டங்களில் எல்லாம் அக்காலத்திலலேயே ஐதீகமான ஆலயங்களை அமைத்து வழிபாடுகளை நிகழ்த்தினர். தமிழக கிராமங்களில் தாம் வழிபட்டமாரியம்மன், முருகன், பிள்ளையார், காளி, இடும்பன், முனியாண்டி, முன்னடையான், வைரவர், கருப்பண்ணன், மதுரைவீரன் திருமால் ஆகிய தெய்வங்களுக்கு கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தனர். அத்தோடு சுடலைமாடன் , கவ்வாத்துசாமி, ரோதமுனி, செந்தகட்டிமுனி ஆகிய தொழில் ரீதியான தம் குலதெய்வங்களையும் வழிபட்டனர். நீண்டகாலபகுதியின் பின்னர் இப்பொழுது இவ்வாலயங்கள் சிவாகமமுறையில் அமைந்த ஆலயங்களாக வளர்ச்சிப்பெற்றுள்ளன. அன்று ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்த மக்கள், பூசைகள், அர்ச்சனைகள், பொங்கல், படையல், மடை என்பனவற்றோடு அமைந்துவிடாது, பலியிடுதல், அலகு பூட்டுதல், தீமிதித்தல், வெட்டரிவாள் மேல் ஏறி நிற்றல், பறவைக்காவடியில் தொங்குதல், அருச்சுனன் தபசுமரத்தில் ஏறி நின்று கலைக்கூத்தாடுவதுடன் தவம் இயற்றி தம் பக்தியை வெளிப்படுத்தியும் உள்ளனர்.

தாம் புகுந்த மன்னுக்கு கடின உழைப்பை ஈந்த இவர்கள், பாரம்பரியம்மிக்க ஒருகலை பண்பாட்டின் நாயகர்களாகவும், அப்பண்பாட்டினை நீண்டகாலம் போற்றி வளர்த்துவந்த மக்களின் வழித்தோன்றல்களாகவும் விளங்கியமையால் கரகம், காவடி, சிலம்படி, கும்மி, கோலாட்டம் ஆகிய கலாநயமிக்க சிற்றாட்டங்களையும் கோயில்களிலும், சிறு விழாக்களிலும் நிகழ்தி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். காமன்கூத்து, பொன்னர்சங்கக்கூத்து, அர்ச்சுனன் தபசு ஆகிய கூத்துகளையும் பக்தி சிரத்தையோடு ஆடினர்.

மாத்தளையில் இருந்து நக்கில்ஸ் மலைத்தொடர்களில் அமைந்துள்ள தோட்டங்களுக்குச் செல்லும் தார் பாதையின் இரு புறங்களிலும் ஆரம்பகாலத்தில் வேரகம, கைக்காவல, கொஸ்வான உட்பட்ட பல பாரிய தோட்டங்கள் அமைந்திருந்தன. இப்பெருந்தோட்டங்களை எல்லாம் இணைப்பதுடன்அவ்வாறு இணைக்கும் நடு இடத்திலிருந்து மேலும் பலதோட்டங்களுக்கு பிரிந்து செல்லும் பாதைகளின் உற்பத்தி ஸ்தானமாகவும், சந்தி பட்டினமாகவும் உருவெடுத்துதான் இறத்தோட்டை நகர் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தி பட்டினத்தில் பிரிந்து வடகிழக்காக செல்லும் சாலையானது அம்பங்கங்க கோரளையின் கம்மடுவ பகுதிக்கு செல்கின்றது. சந்தியில் தென்கிழக்காக செல்லும் பாதை நிக்கலோய, நடுத்தோட்டம் ஆகிய பகுதிககளை இணைப்பதுடன் லக்கல, பள்ளேகம பகுதிகளையும் தொடர்புப்படுத்துகின்றது. மாத்தளை மாவட்டத்தில் உள்ள நான்கு தேர்தல் தொகுதிகளில் இறத்தோட்டை தேர்தல் தொகுதியும் ஒன்றாகும். தற்போது மாத்தளை மாவட்டத்தில்தான் அதிக அலளவிலான தோட்டங்கள் உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 02

சைவத் தொன்மையும் புகழும் வாய்ந்த இலங்கைத் திருநாட்டில் ஈசனுக்கு நெற்றிக்கண் அமைந்துள்ளது போல் மலையகம் விளங்குகின்றது சிவனின் திருப்பாதம் பதியப்பெற்ற சிவனொளிபாத மலையின் அருளாட்சியில் திளைக்கும் மலையகம் என்றும் ஆன்மீக ஒளி சுடரும் திவ்விய பூமியாகும்.

பண்டு தொட்டு இன்று வரையிலான மலையகத் தமிழ் இனக்குழுவானது இந்து, சைவ, வைஷ்ணவ சமயம் சார்ந்ததாகவே விளங்குகின்றது. மலையக மக்களை தனி ஒரு இனக்குழுவாக அடையாளப் படுத்துவதற்கும் இனம் காண்பதற்கும் இந்த சமயத்தன்மையும் பண்பாடும் பாரம்பரிய கலாசாரமும் விழுமியங்களுமே முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

வேதகாலத்தில் இயற்கையின் சூழ்நிலையே வாழிபாட்டுக்குரிய இடங்களாக அமைந்தன. வேள்வித்தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது நதிக்கரைகளிலும் மரச் சோலைகளிலும் தெய்வீக வணக்கம் நிகழ்ந்துள்ளன. அத்தகைய விருட்ஷங்கள் நாளடைவில் "ஸ்தல விருட்ஷங்கள்" ஆயின. பின்பு ஆகமங்களை அனுசரித்து ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன.

திருக்கோயிலின் அமைப்பை பெரியோர் பல்வேறு விதமாக விளக்கியுள்ளனர். இறைவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வீற்றிருக்கிறான் என்பதை எல்லா மனிதர்களுமே அறியும் தன்மை கொண்டவர்கள் அல்ல எனவேதான் அவர்களின் உடலாக ஆலய அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடம் ஆலயமாகும். கோயில் என்பது எல்லாவற்றுக்கும் மேலான "கோ" வாகிய அரசன் இறைவனது இல்லம் ஆகும். ஆலயம் ஆன்மா இறைவனில் லயப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாகும். உலகெங்கும் எரியுறு நீர் போல் தங்கி இருக்கின்ற இறைவன் பாலில் வெண்ணெய்போல் விளங்கி மக்களுக்கு அருள்புரிகின்ற இடம் திருக்கோயில்களாகும். ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையிலே நேராகப் படுத்திருப்பது போன்ற அமைப்பிலே காணப்படுகின்றன.

ஆலய அமைப்பினை "ஹிருத்ய" "கமலப் பிரஸ்தாரம்" "சரீரப் பிரஸ்தாரம" என இருவகையாக ஆகமங்கள் கூறும் ஹிருதய பிரஸ்தாரமாக அமைக்கப்பட்டிருப்பது சிதம்பரமாகும். பெரும் பாலான ஆலயங்கள் "சரீரப் பிரஸ்தாரம்" என்ற வகையினை சேர்ந்தவையாகும். சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவற்றை முறையே கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்னபன மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் ஆகிய வடிவமாகக் கூறுவர்.

ஆலய அமைப்பில் பிரதானமான பகுதியாகக் கர்ப்பக்கிரகம் விளங்குகிறது. அது சிரசினை குறிக்கும். அதனையடுத்து அமைவது அர்த்தமண்டபமாகும். அர்த்த மண்டபம் கழுத்தினைக் குறிக்கும். அதனை அடுத்து காணப்படுவது மகாமண்டபம்; இது மார்பைக் குறிக்கும். அடுத்து தரிசன மண்டபம்; இது வயிற்றைக் குறிக்கும் ஏனைய அலங்கார மண்டபமும் சபா மண்டபமும் கால்களைக் குறிக்கும். இராஜ கோபுரம் பாதங்களைக் குறிக்கும் இதுவரை கூறியவற்றில் இருந்து ஆலயம் எமது உடலமைப்பைப் போல் விளங்குகிறது என்பதை அறியலாம்.

நமது ஆலய அமைப்பினை பிரபஞ்சத்தின் மாதிரி உருவம் என்று ஒப்பிட்டும் கூறுவதுண்டு. பஞ்சபிரகாரங்களை பஞ்சபூதங்கள் என்றும், அங்கு நுண்ணிய பொருளாக இறைவன் உள்ளான் என்றும் கூறுவர். ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றொருபகுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதம் விளங்குகின்றது. இரதம் என்று உடலையும், அதில் வீற்றிருப்பவனே ஆத்மா, புத்திதான்சாரதி, மனமேகடிவாளம், பஞ்சேந்திரியங்களே குதிரைகள், விஷயங்களே அவை செல்லும் இடமாகும். கோயில்களில் இருக்கும் எல்லா கோபுரங்களை விட இராஜ கோபுரம் உயர்ந்ததாக இருக்கும் "ஸ்தூலலிங்கம்" என்று கூறப்படும் இராஜகோபுரம் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் விளக்கும் கோட்பாட்டை உருவகப்படுத்தி விளங்குகின்றது. இன்று மலையகத்தில் இவ்வாறு ஆகம விதிகளுக்கமைந்து இராஜகோபுரம், இரதோற்சவம் முதலியன கொண்ட பல ஆலயங்கள் விளங்குகின்றன. அண்டமெல்லாம் குடி கொண்டிருக்கும் தெய்வம் என்று சிறப்பாக இராஜ கோபுரத்தை இயம்புவார்கள். கண்ணுக்கு அது தென்படும். அதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவது முறை. எட்ட இருப்பவர்களுக்கு கடவுளைப்பற்றிய ஞாபகமூட்டுவதற்கே அது அமைந்திருக்கிறது.

ராஜகோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன் கண் அமைக்கப்பெற்றிருக்கிறன. அவைகளுக்கு மானுட வடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர்களுடைய விதவிதமான வாழ்க்கை முறைகளும் ஆங்கு வடிவங்களில் விளக்கப்பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம்பெறுகின்றனர். தேவர்களின் செயல்களும் ராஜகோபுரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன. விலங்குகளும், பறவைகளும், ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம்பெறுகின்றன.

பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு என்பது இக்கோட்பாடாகும் சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், மக்கள், இனம், தேவர்கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் இருக்கின்றார்கள். அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது இன்னது தான் இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தரங்களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம்பெறுகின்றன. இக்கோட்பாட்டைராஜகோபுரம் உருவகப்படுத்தி விளக்குகிறது. ராஜகோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று எண்ணில் இங்ஙனம் அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாகப் பெருகிக்கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. மூன்று வாயில்கள் உள்ள இடத்து, ஜாக்கிரத, சொப்பன சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்த்தைகளை அவைகுறிக்கின்றன.

ஐந்து வாயில்கள் உள்ள இடத்து ஐம்பொறிகளைக் குறிக்கின்றன. ஏழு வாயில்கள் உள்ள இடத்து மனம், புத்தி, எனும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப் பெறுகின்றன். ஒன்பது வாயில்கள் உள்ள இடத்து சித்தம், அகங்காரம் எனும் இரண்டு தத்துவங்கள் மேலும் சேர்க்கப்பெறுகின்றன. இத்தனை வாயில்களுள் கோயிலினுள்ளே செல்லுவதற்கு தரைமட்டத்தில் உள்ள ஒரு வாயில்தான் உதவுகிறது. ஏனையவைகள் ஆங்கு அமைக்கப்பட்டிருந்தும் ஆலயத்தினுள் செல்லுவதற்கு பயன்படுத்தபடுவதில்லை. இதன் மூலம் ஓர் கருத்து நமக்குப் புகட்டப்படுகிறது. புறக்காரணங்களும், அகக்காரணங்களும் பல நம்மிடத்து இருக்கின்றன. எனினும் கடவுள் நாட்டம் கொள்ளும் பொழுது மனது என்னும் ஒரு கணம்தான் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. ஏனைய காரணங்களையெல்லாம் இருக்கிறபடி வைத்துவிட்ட மனது இறைவனை நாடி உள்முகமாக போக வேண்டும் என்பது கோட்பாடு பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளை கொண்டும் புற உலகை அறிகிறோம். புற உலகை அறிகிற செயலை அப்படியே நிறுத்திவைத்துவிட்டு மனத்தை துணையாகக் கொண்டு பரம் பொருளிடத்து உள்முகமாகப் பயணம் போகவேண்டும் என்னும் கோட்பாட்டை இராஜ கோபுர வாயிலினுள் பண்ணும் பிரவேசம் விளக்கிக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்னும் வாக்கிற்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ள ராஜகோபுரத்தில் அசுசியான சில வடிவங்களையும், அமைந்திருப்பதையும் காண்கிறோம். சிற்பாசாரியார்கள் அத்தகைய வடிவங்களைஅமைத்தேயாக வேண்டும் என்றும், ஆகம விதிப்படி அப்படி இருக்கிறது என்றும் கூறுவார்கள்.

இயற்கையில் உள்ளவையெல்லாம் அதன்மூலம் விளக்க வேண்டும் என்றும், இயற்கையில் நலம், கேடு ஆகிய எல்லாம் இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டவே இவ்வாறு அமைக்கப் படுகின்றது என்பதை விளக்குவர். நல்லனவற்றை ஏற்று மறைக்க வேண்டியதை மறைத்து தவிர்க்கவேண்டியதை தவிர்த்து வாழவேண்டும் என்பதற்கு இக்கோபுர அமைப்பு எடுத்துகாட்டு என்பர். ராஜ கோபுரத்தை கடந்த உள்ளே சென்றதும் முதலில் கொடிமரம் காணப்படுகின்றது. கொடிக்கம்பம் துவஜஸ்தம்பம் எனவும் அழைக்கப்படுகிறது. இதனை வணங்குவதன் மூலம் அந்தராத்மா நிலையினுக்கு தத்துவாத்மா நிலை கிடைக்கப்பெறுகிறது. கொடிமரம் மனிதனின் முள்ளந்தண்டெலும்பினை உணர்த்துகின்றது. எமது முள்ளந்தண்டெலும்பினை அடிப்பாகம் குண்டலனி சக்தியின் இருப்பிடமாகும். கொடிமரத்திலுள்ள முப்பத்திரண்டு வளையங்களும் முள்ளந்தண்டிலுள்ள முப்பத்திரண்டு எலும்புகளையும், கொடிமரக் கயிறுகள் இடைகலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும் போது ஆன்மா பேரானந்தத்தை எய்துகிறது. எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் ''தொப்புள்'' எனும் ஸ்தாபனத்தில் நந்தியை பிரதிஸ்டை செய்யும் போது எண்ணங்களை அடக்கி மனதினை தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. எம்மில் மறைந்திருக்கும் தெய்வீக சக்தியையே குண்டலினி சக்தி என்கின்றோம். அதற்கு சிறிது மேலாக கணபதியின் இருப்பிமான மூலாதாரம் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமல வடிவில் அமைந்துள்ளது. கொடி மரத்தின் அடியில் இருக்கும் கணபதி எமது மூலாதாரத்தில் அருவ நிலையில் இருக்கும் கணபதியைக் குறிக்கும். இக்கணபதியையே "மூலாதார கணபதி" என்கிறோம். கொடிமரத்திலே கொடிச்சீலையும், தர்ப்பைக்கயிறும் சுற்றப்பட்டிருக்கும். கொடிமரம் ஆனது சிவத்தையும் நந்தி எழுதப்பட்ட சீலை ஆன்மாவையும், தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கின்றது. கொடிமரத்தை ஆதாரமாகக் கொண்டு சீலை இருப்பதுபோல் சிவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா இருக்கின்றது.

பாசம் சிவத்தை சாராமல் ஆன்மாவை சாரும் என்பதைக் கொடிச்சீலையுடன் இணைக்கப்பட்டுள்ள தர்ப்பைக் கயிறு உணர்த்துகிறது. பாசம் வலி இழந்த நிலையின் ஆன்மா சிவத்தைச் சாரும்.

கொடிமரத்தை அடுத்துக் காணப்படுவது பலிபீடம் ஆகும். இது பத்திரலிங்கம் எனவும் பொருள்படும். பலிபீடம் என்பது பாசம் ஒடுங்கும் இடமாகும். இதனை வணங்குவதால் ஆசைகள் பலி கொடுக்கப்படுகின்றன. ஆன்மா புனித நிலையை அடைகிறது. இந்த அந்தராத்மா நிலையை உணர்த்துவதே பலிபீடமாகும். அறுவகை உட்பகையும் இதயத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்பதை பலபீடம் உணர்த்துகிறது.

பாசம் நீங்கிப் பக்குவம் அடைந்த ஆன்மாவை நந்தி குறிக்கிறது. இது பலிபீடத்திற்கு அப்பால் அமைந்திருக்கும். பாசத்திலிருந்து விடுப்பட்ட ஆன்மாக்கள் பதியைச் சாரும் என்பதைச் சுட்டும் வகையில் நந்தி எப்பொழுதும் மூலமூர்த்தியை நோக்கியவாறு அமைக்கப்பட்டிருக்கும். சிவன் கோயிலில் இடபம், விநாயகப் பெருமானுடைய ஆலயத்தில் பெருச்சாளி ஆகவும் சுப்பிரமணியப் பெருமானுடைய ஆலயத்தில் மயிலாகவும், மகாவிஷ்ணு கோயிலில் கருடனாகவும், அம்பிகை கோயிலில் சிங்கமாகவும் நந்திகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மாவைக் குறிக்கும். மூலப் பொருளாகிய கடவுளைப் பார்த்தவண்ணமாய் வாகனம் அமைந்திருக்கிறது. கடவுளை சென்றடைவதற்கு சர்வகாலமும் மனது கடவுள் நாட்ட்திலேயே இருக்கவேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக்கொண்டிருக்கிறது. சுற்றிவருகின்ற பக்தன் ஆலயத்தின் உள்ளிருக்கும் தெய்வத்தையும் அதைப் பார்த்த வண்ணமாயிருக்கும் வாகனத்தையும் சேர்த்துவைத்து வலம் வருகின்றான். குறுக்கே நுழைவது முறையன்று வழிபடுகின்ற அனைவருக்கும் வழிபாட்டுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். இடைஞ்சல் செய்யலாகாது என்பது அதன் கருத்து பிறருக்கு இடைஞ்சல் செய்கின்ற போது கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பாய் விடுகிறான். பிறர் வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து வைக்கும் அளவு ஒருவன் தானே வழிபாட்டில் முன்னேற்றம் அடைகிறான். பிறரைப் புறக்கணித்து எவரும் முன்னேற்றமடைய முடியாது.

பிறருக்கு பணிவிடை செய்து யாரும் முன்னேற்றம் அடையலாம் என்ற இக்கோட்பாடு ஆலய வழிபாட்டில் அடங்கியிருக்கிறது. வழிபாட்டில் மூல விக்கிரகம் அமைந்திருக்குமிடம் கருவறையாகும். பிரம்ம கபால வடிவில் கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானத்தை அமைப்பது முறை. அதனை மூலஸ்தானம் எனவும் அழைப்பர். அதன் மேலே அமையும் பகுதி விமானம், தூபி போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகிறது. மகா மண்டபத்தில் தெற்கு நோக்கி தேவி மூர்த்தமும், தரிசன மண்டபத்தில் நடராஜ மூர்த்தமும் காணப்படும்.

கோயிலைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டிருக்கும் மதிலுக்கும், பிரதான ஆலயத்திற்மிடையேயுள்ள இடைவெளியை உள்வீதி அல்லது உட்பிரகாரம் என்றழைப்பர். மதிலுக்கு வெளியே காணப்படுவதை வெளிவீதி அல்லது வெளிப்பிரகாரம் என்பர். உட்பிரகாரத்தில் ஏனைய பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகள் அமைக்கப்பட்டிருக்கும். அநேகமான ஆலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிக்கேற்றப்படி ஒரு வீதியையோ அல்லது பல வீதிகளையோ அமைத்திருப்பர். நாம் இறைவனை வலம் வரவும் அங்கப்பிரதட்சணம் செய்யவும் திருவிழாக்களின் போது சுவாமி எழுந்தருளி வீதியுலா வரவும் வீதிகள் பயன்படுத்தப்படுகின்றன. வெளி வீதிகளில் மடங்களும் அமைந்திருக்கும்.

கோயிலைச் சுற்றி நடக்கும் போது உள்ளிருக்கும் தெய்வம் தனது வலது கைபக்கம் இருக்குபடி பார்த்துகொள்கிறான் பக்தன். அதுவே வலம் வருதல் என்பதன் பொருளாகும். வலம் வருதல் பிரணாயாமத்திற்கு தகுதியுடையதாகிறது. மனதகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற வாயுவில் வேறுபாடு உண்டாகிறது. கீழான மனப்பான்மை உடையவர்களின் சுவாசத்தின் போக்குவரத்தில் தடுமாற்றம் உண்டாகும். மேலான மனப்பான்மை உடையவருக்கு சுவாசத்தின் போக்குவரத்து முறையாக நிகழ்கிறது. தங்குதடை இன்றி அமைதியாக வலம் வருவது போன்று சுவாசமும் ஒழுங்காக நிகழ்கின்றது. சூக்சுமமாக உடலின் கண் நிகழும் நிகழ்ச்சி பிரணாயமம் வலம் வருதல் என்னும் சரீரத்தின் ஸ்தூலமான செயல் அதன் புறச்சின்னமாகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆலயத்தை பற்றிக் கூறும் போது ஆலயமானது. எங்கும் வியாபகரமாய் மறைந்து இருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிப்பட்டு உய்யும் பொருட்டு சாந்தியத்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம் என்று குறிப்பிட்டுள்ளார். கோவிலைப்பற்றிகுறிக்கும் சொற்கள் பல உண்டு. இவற்றுள் ஆலயம் என்பது ஒன்று; அதாவது, ஆன்மா லயப்படும் இடம் என்று இதற்கு அர்த்தம் கொள்ளலாம் என்று பகன்றார். ஆத்மா லயப்படும் இடமாக ஆலயம் விளங்குவதோடு ஆன்மீக உணர்வின் வித்தாக அமைகின்றன. திருக்கோயில்களில் நடாத்தப்படும் பூஜைகள், ஆராதனைகள், மந்திர ஒலிகள், கிரியைகள், யாகங்கள் என்பன பக்தியை வளர்ப்பதோடு மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டிற்கும் அருள்புரிவனவாக உள்ளன. தெய்வீகம், சாந்தம், தூய்மை அன்பு நிறைந்து அமைதி கொண்ட ஆலயங்களில் வழிபடுவதால் மனம் தூய்மையடைகிறது. ஆலய வழிப்பாட்டின் மூலம் ஆன்மடேற்றம் அடைய முடியும். உடல் ஆலயம் உடம்பினுள்ளேயிருக்கும் உயிர் இறைவன் இந்த உயர்ந்த நிலையினை எய்த முடியாதவர்கள் உருவத்தில் இறைவனை தரிசித்து வழிபட திருவுருவ வழிபாடு அமைகிறது. தம் ஞானத்தால் இறைவனைக் காணவும், கருதவும் அரிதாக உள்ளவர்கள் உருவத்திருமேனியில் வழிபாடு செய்தலே திருவுருவ வழிபாடாக அமையும். திருவுருவங்களை மூர்த்தி, விக்கிரகம், விம்பம், பிரதிமைப் பேரம் முதலிய பெயர்களாலும் சுட்டுவர்.

சிவபெருமானின் மூவகைத் திருமேனிகளில் அருவுருவத் திருமேனியே **"லிங்கம்"** எனப்படும். இது சிவனுக்கு மட்டுமே உரியதால் சிவலிங்கம் எனப்படும். சுயம்புலிங்கம் தானே தோன்றியது. தைலிங்கம் தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. காணலிங்கம் விநாயகர் முதலிய கணர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. மானுடலிங்கம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது இறைவனின் ஐந்தொழில்களையும் நடராஜ வடிவம் எமக்கு உணர்த்துகின்றது.

சாக்தம் , வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய சமயங்களின் தெய்வக் கடவுள்களே சிவாலயங்களில் பரிவாரதெய்வங்களாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். ஆலயத்தின் மகாமண்டபம் அல்லது வெளிமண்டப வாயிலின் இருமருங்கும் சூரியனும் சந்திரனும் இறைவனை நோக்கியவாறு பரிவார தெய்வங்களாக நிறுவப்பட்டிருக்கும். ஆலயங்களில் பலவிதமான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவைகளினால் மனித சமுதாயம் பக்தியினை வளர்ப்பதோடு பண்பாட்டினையும், நல்லொழுக்கம், கலாசாரம் முதலிய விழுமியங்களையும் வளர்த்துக்கொள்ள இவை துணைபுரிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் புராணபடனம், திருமுறைகள் முற்றோதல், சமயம் சார்ந்த கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் பண்ணிசை என்பனவற்றை நடாத்துவதால் சமய அறிவினை மட்டுமன்றி நன்நெறியால் வாழவும் வழிபிறக்கின்றது.

ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா முக்கியமானதாகும். படைத்தல், காத்தல், அழித்தல், அளுளல், மறைத்தல் ஐந்தொழில்களையும் விளக்குவனவாகவே மகோற்சவம் அமைந்துள்ளது. இதிகாச, புராணங்கள், யாகம், அல்லது வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை என்பன பற்றி ஆதாரத்துடன் விளக்கியுள்ளன. அஷ்வமேத யாகத்தை நம்காலத்தில் இலங்கையின் முதல் இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராஜதுரை அவர்கள் நடாத்தியதை அறிவோம். இதுபோல் ஆலயங்கள் பலவற்றில் பெரியோர்கள், யாகங்கள் பலவற்றை செய்துள்ளனர்.

பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய தேவர்கள் வேள்விகள் நிகழ்த்தியதாக பாரதத்தில் குறிப்புகள் உண்டு. தருமர் ராஜ சூய யாகம் செய்துள்ளார். யாகம் வேள்வி என்பனவற்றை விட தவம் பொருட் செலவற்றது. மகாபாரதத்தில் யாகங்களும், தவமும், இடம்பெற்றமையினை அறிகின்றோம். தவம் வலிமை மிக்கது, கடுமையானது, திருமால் தவம் இயற்றி சக்கரம் பெற்றமையினையும், அருச்சுனன் பாசுபதம் பெற்றமையினையும் பிற்காலத்தில் முனிவர்கள் தவம் செய்து வல்லமை பெற்று விளங்கியதையும் இதிகாச புராணங்கள் விளக்குகின்றன.

''கலியுகத்தில்'' தவம் ஒன்றே என்னை அடையச் சிறந்த வழி என சிவபிரான் திருவாய் மலர்ந்தாக புராணம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி, தலம், தீர்த்த வழிபாடு குறித்து இந்து சமய நூல்கள் சிறப்பித்து விள்க்கியுள்ளன. தெய்வீகத்தன்மை வாய்ந்ததும், புண்ணியங்கள் மிக்கதுமான தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பாவங்கள் நீங்கப்பெற்று நற்பேற்றினை அடையலாம், மனம், வாக்கு, காயம், இம்மூன்றை தூய்மைப்படுத்தி புலன்களை அடக்கி தீர்த்த யாத்திரை செய்து அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி உரிய தெய்வங்களை வழிபடுவதன் மூலம் இன்மை மறுமை, இன்பம் எல்லாம் பெறலாம். தீர்த்தங்களில் நீராடுவதன் மூலம் தீராத பிணிகள் தீரும். மாசிமக நட்சத்திரம் பிரகஸ்பதியுடன் கூடி கும்பராசியுடன் பிரவேசிக்கும் போது மகாமகம் நிகழ்கிறது. இத்தினத்தில் இந்துக்கள் கங்கா தீத்தத்தை ஆடி பயன்பெறுவர். மாத்தளை அருள்மிகு ஸ்ரீ ஏழுமுகக்காளியம்மன் ஆலயம் சுதுகங்கை தீர்த்தக்கரையில் அமைந்துள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் தோட்டப்பகுதிகளில் அமைந்துள்ள ஆலயங்களுக்கு அண்மையில் மலைகளிலிருந்து தாவிக்குதித்தோடி வரும் பல நீரோடைகள் உள்ளன. இவற்றையே காமன் கம்பம் ஊன்றுவதற்காகவும் குடி அழைத்து வருதல், கரகம் பாலித்தல், காவடி, வேல் குத்துதல், கரகம் குடிவிடுதல், தெப்பத்திருவிழா ஆகியவைகளின் போது மேற்கொள்ளும் சமய சடங்குகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். சுதுகங்கைத் தீர்த்தத்தில் பக்தர்கள் அலகுபூட்டி, மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசிமகத் திருவிழாவின் போது பரவைக் காவடி எடுத்தும் வேப்பிலை, கற்பூரச்சட்டி எடுத்து பக்திபரவசமாக பவனி வருவது மலையக மக்களின் தனித்துவமான வழிபாட்டுநெறிக்கு தக்க உதாரணமாகவிளங்குகின்றது.

வேள்வி, தவம், தீர்த்த யாத்திரை என்பனவற்றைவிட தோத்திர வழிபாடு கடைபிடிக்க இலகுவானதாகவும் எளிதில் கையாளக் கூடியதுமாக விளங்குகிறது. தோத்திர வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமயமானதாக பக்திப் பெருக்கெடுத்தனவாகவும் இறைவனிடம் மன்றாட்டமாக வேண்டி கருணையினைப் பெறவும் இறையருளில் திளைக்கவும் செய்கிறது. வழிப்பாட்டு முறைகளில் தியானம் தலை சிறந்த சாதனமாகும் கூர்மபுராணம், பாரதம் என்பன தியானத்தின் சிறப்பினைக் கூறுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விரதமாவது மனம், பொறி, வழிபோகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்புடன் விசேடமாக வழிபடுதல் என்று விரதத்தைபற்றி கூறியுள்ளர். விரதத்திலும் தவத்தின் சாயல் உள்ளது. புராணங்கள், விரதங்கள் பற்றி குறிப்பிடும் இடங்களில் விரதங்களில் மேற்கொள்ளவேண்டிய, நியமங்கள், வழிபட வேண்டிய முறைகள், விரதங்களின் பெருமை முதலியவற்றை கூறுவதோடு விரதங்களினால் ஏற்படும் பயன்கள் பற்றியும் கூறியுள்ளன. விரத மான்மீயம், விரத சிந்தாமணி கணேசபுராணம் போன்ற நூல்கள் விரதங்கள் பற்றி விளக்கிக் கூறியுள்ளன.

காரடை நோன்பு என்னும் விரதத்தை, சாவித்திரி தன் கணவன் சத்தியவானின் நீண்ட ஆயுளை வேண்டி மேற்கொண்டாள். பங்குனி மாதத்தில் சுமங்கலிப் பெண்கள் இந்நோன்பினை நோற்கின்றனர். ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம், கேதார கௌரி விரதம், உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம், நவராத்திரி விரதம், புரட்டாதி சனி விரதம், ஆகிய விரதங்களை இந்துக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

இடர் நிறைந்த மானுடவாழ்வில் இறைவன் அருளினைப் பெற்றுக் கடைத்தேற விரதங்கள் நோன்புகள் இவ்வாறாக அனுஷ்டிக்கப்படுகின்றது. பிதிர் கடனுக்காகவும் விரதம் அனுஷ்டிக்கப்படுவது இந்து சமய கலாசாரமாகும். தாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவர்கள் சித்திரா பூரணை பௌர்ணமியிலும் தந்தைக்காக அமாவாசை நாளில் விரதமிருப்பது நம்மவர் மரபாகும்.

திருக்கோயில்களில் பூசை, அர்ச்சனை, ஆராதனை என்பன நடைபெறுகின்றன. யாகம் முதலிய வழிபாட்டு நெறிகளில் சிறந்த அம்சங்களை உறுப்புகளாகக் கொண்டு பூசை என்னும் வழிபாட்டு முறை உருவாகியதென பெரியோர் பகர்வர் சிவாகம நெறியின்றி, மக்கள் தத்தமது பிரதேச அமைப்பிற்கு ஏற்பவும், இனக்குழு தனித்துவ பண்பாட்டிற்கு ஒப்பவும், கிராமிய கலாசாரத்திற்கும் நம்பிக்கைகளுக்கு அமையவும், தொழில்முறைக்கமையவும், கிராமிய தெய்வங்களை வழிபடுவதுடன் கிராமிய பூசை முறைகளையும் நடத்துகின்றனர்.

இவ்விரு வகை வழிபாட்டு நெறிகளும் மலையகத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் சிறப்புற நடைபெறுவதும் பக்திநெறி தழைத்து இந்து சமயம் வளர்ந்தோங்குவதையும் நாம் காணக்கூடியாதாக உள்ளது.

சித்திரையில் வரும் சதுர்த்தியில் விநாயகர் விரதத்தையும், சஷ்டி, கார்த்திகைத் தினங்களில் முருகப் பெருமானின் விரதத்தையும், பிரதோஷம், சோமவாரம் ஆகிய தினங்களில் சிவ விரதத்தையும் முறைபடி இருந்து இம்மூர்த்திகளின் அருளைப் பெறலாம். சித்திர பரணி பைரவ விரத தினம் ஆகும். சித்திரை முதற் செவ்வாய் கிழமை வீரபத்திரருக்கான விரத நாள் ஆகும். சித்திரை கிருஷ்ணபட்ச ஏகாதசி பாவவிமோசனிகா என்றழைக்கப்படும் இவ்விரதத்தை நோற்றால் பாவம் நீங்குமென அழைப்பர் இ.்து இஷ்ட சித்திகளைப் பெற நோற்கப்படுவதாகும். இவ்விரு ஏகாதசி தினங்களிலும் கிரமப்படி மஹா விஷ்ணு விரதம் இருப்பது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 03

மாத்தளை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இரத்தோட்டை பிரதேசம் முதலிடம் வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. இங்கே இரத்தோட்டை பிரதேசம் என்னும் போது இரத்தோட்டை கடைவீதி, சின்ன இரத்தோட்டை உட்பட இரத்தோட்டை பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமிய குடியிருப்புகள், லக்கல தேர்தல் தொகுதியை சேர்ந்த அம்பன்கங்கை பிரதேச சபைக்குட்பட்ட கிராமப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் உட்பட ஒரு புவியியல் பிரதேசமாக இணைக்கப்பட்டுள்ள கம்மடுவ, ஹப்புகஸ்பிடிய கிராமிய தோட்டப் பகுதிகளோடு இப்பகுதிளில் அமைந்துள்ள பாரிய பெருந்தோட்டங்களான நிக்கலோய, பம்பரகல, கம்மடுவ, ஓப்பல்கல, மௌசாகந்த, எலகல, தங்கந்த, ஓவல, வேரகம, நடுத்தோட்டம், வனராணி, குளோடா, திக்கும்புர, லோங்வீல் என்பவற்றை உள்ளடக்கிய தமிழ்ர் வாழ்விடங்களையும், இருப்பினையும் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்ட பின்புல நோக்கு, பிரதேச செயலகம் பிரதேசசபை பிரிவுகளுக்கப்பால் இரத்தோட்டை பிரதேச மலையக மக்கள் வாழ்க்கைப் பகைபுலத்தின் அமைப்பினை ஒட்டியதாகும். மலையகத்தின் வடக்குவாயிலெனத் திகழும் மாத்தளை மாவட்டத்தில் மலையக மக்கள் இனத்துவ தனித்துவத்துடனும், பாரம்பரியபண்பாட்டுச் சிறப்புகளுடனும் வாழும் பகுதிகளில் இரத்தோட்டை நகர் தனிச்சிறப்புடையது. மாத்தளை மாநகரை நெடுஞ்சாலை நகரென்றால், இரத்தோட்டையைச் சந்திக்குடியிருப்புப் பட்டினம் எனலாம். மழைவளமும், மண்வளமும், பயிர்வளமும் கண்கவர் எழில் வளமும் மிக்க இரத்தோட்டையின் மலைவளம் வரலாற்றின் வரிகளில் களிநடம் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தோட்டை எனும் நாமம் நம்மை வரலாற்றின் தடங்களில் கண்விழிக்க வைக்கின்றது. இரத்தோட்டை நகருக்குக் கிழக்கே வியூகம் அமைத்து நிற்கும் நக்கில்ஸ் மலைகளின் வடகீழ் தாழ்பகுதி வரள் மலையகமாக விரிகின்றது. பள்ளேகம, லக்கல, ஹசலக்க என, தொடரும் அப்பகுதியில் புராதன இராசதானிகள் பல இருந்துள்ளன. இதனை ஒட்டிய மகாவலி நதி தீரத்தில் மகியங்கன விஹாரை உள்ளது. மாத்தளை பகுதி முன்பு சில காலகட்டங்களில் உபராச்சிய பகுதியாக பரிபாலிக்கப்பட்டுள்ளது. இரத்தோட்டைக்கு வடகிழக்காக அமைந்திருந்த இராச்சியத்திற்கும், மாத்தளை இராச்சியத்திற்கும் நடுவில் மலைச்சரிவுகளில் சலசலத்து சங்கீதம் பாடிவரும் அருவிகளின் அரவணைப்பில் தொட்டிலில் துயிலும் குழந்தையைப் போன்று அமைதியினதும் உயர்ந்த பண்பாட்டினதும் சொரூபமாய் விளங்குவது இரத்தோட்டை நகராகும்.

இந்நகரில் மேற்கூறிய இராச்சியங்களின் ஒற்றர்களும், கிளர்ச்சியாளர்களும் சந்தித்து இரகசியங்களை பரிமாறிக்கொண்ட இடமே இரத்தோட்டை என்போரும் உளர். மாத்தளைக்கு அணித்தேயுள்ள "வாரியபொல" என்னும் இடம் பண்டைக்கால வானவூர்த்திகளான "புட்பக விமானங்கள்", மயிற்பொறிகள் உட்பட வானவூர்த்திகளின் தளமே என்பர்.

எழுதாமறையாக விளங்கிய திரிபீடகத்தை எழுத்தில் வடிக்கவேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டபோது, மாத்தளை அலுவிஹார, விஹாரையில் பௌத்த துறவிமார்கள் கூடி அதனை எழுதியபோது அவர்களில் உயர்ந்த அனுபூதிமான்களாகவும், புலனடைக்கி உயர்நிலையை அடைந்த சந்நியாசிகளான "ராஹாதுன் வான்சேகள்" என்று அழைக்கப்பட்ட மேற்படி பௌத்த சந்நியாசிகள் இதமான சுவாத்தியமிக்கதும், நீர்வசதியுடையதுமான இன்றைய இரத்தோட்டையிலேயே தங்கி, ஆன்மீகப் பணியாற்றியுள்ளனர். இவ்வாறு ரஹதுன்வான்சேகள் வாழ்ந்த பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் மருவி இரத்தோட்டை ஆகியது என்பர். மேற்கூறியவைகள் போன்று இன்னும் பல கர்ணபரம்பரைக் கதைகளை இவ்வூர் பெரியார்கள் கூறக் கேட்கலாம்.

“மகுலேதென்ன ரஜமகாவிகாரை” உடவேரகம பகுதியில் அமைந்துள்ளது; இது உபராஜனாக விளங்கிய விஜயபாலனினால் 1717-களில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு பத்தினிக்கு கோயில் உள்ளதோடு பூஜைகளும் நடைபெறுகின்றன. “கனேதன்ன” ரஜமகா விகாரை, பிட்டகந்த விகாரை, கொஸ்வான, போகம்பர உலுகோவில் என்பன இப்பகுதியில் உள்ள விகாரைகளில் சிலவாகும். அநுராதபுர வெள்ளரசு மரத்தில் முகிழ்த்த எட்டு கிளைகளில் ஒன்றை வலகம்பாகு அரசன் காலத்தில் கனேதன்ன ரஜ மகா விகாரையில் நாட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு சனிக்கிழமைகளில் நடைபெறும் “மல்பூஜா” விசேடமானதாகும்.

இப் பௌத்த விஹாரைகளில் பத்தினி, கதிர்காமக் கந்தன், பிள்ளையார் ஆகிய தெய்வங்களுக்கு சிறிய கோயில்கள் இருந்ததுடன் பூஜைகளும் நடந்தே வந்துள்ளது. இரத்தோட்டை, நெலுவாகந்தை, எகடகமவில் உள்ள ஒரு குகையில் கல்வெட்டு சாசனம் **(INSCRIPTION)** உள்ளது. இக்கல் வெட்டு சாசனத்தில் காணப்படும் எழுத்துக்கள் “பிராமி” எழுத்துருவை ஒத்தவையாகும். இச்சாசனம் வலகம்பாகு மன்னன் காலத்தை சேர்ந்தது என்பர். இதில் புலனடக்கிய அனுபூதிமான்களின் சிறப்புக்கள் உட்பட பௌத்த சமய விடயங்கள் பல குறிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். “ஹப்புவித” என்ற இடத்தில் கிராம தோட்டம் ஒன்றில் கல்வெட்டு சாசனம் ஒன்று உள்ளது. இதில் உள்ள எழுத்துக்கள் சிங்கள மொழி என அறியப்பட்டுள்ளது. இச்சாசனத்தில் விகாரைக்கு பூஜைசெய்யப்பட்ட இடம் பற்றிய விபரம் உள்ளது. பூர்வராம பன்சலையில் தம்புள்ள சிலையை ஒத்த சிலையோடு விதான சித்திரங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தோட்டை நகருகப்பால் தொலைவில் உள்ள கரகாஸ்தென்ன தோட்டமே இப்பகுதியில் உள்ள பூர்வீக மூத்த தோட்டம் என்போருமுளர். புசல்லாவ, ஸ்ரீரங்கவத்த தோட்டத்துக்கு மேற்கே ஸ்பிரிங்வெளி பகுதியில் ஏலக்காய் தோட்டங்களோடு பிரம்பு கொடிகளும் அடர்ந்து, படர்ந்து இயற்கைக்கு எழிலூட்டுகின்றன.

பன்னகாமம் என்னும் மாத்தளை பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ முத்துமாரியைத் தொழுது ஆலயத்துக்கு அப்பால் மந்தண்டாவளை சந்தியில் வடகிழக்காக பிரியும் தார்ச்சாலையில் சில காததூரம் சென்றால், பொல்கொல்ல, உக்குவல சுரங்க வழிக்கூடாக திசைத் திருப்பப்பட்ட மகாவலி கங்கையின் நீர் தவழ்ந்தோடும் சுதுகங்கை ஆற்றின் மறுகரையில் ஏழுமுகமமாய் எழுந்து எங்கள் குறை தீர்த்தருளும் ஏழுமுகக்காளியம்மன் கோயில் உள்ளது. இந்த சுதுகங்கை தீர்த்தத்தில் அலகுபூட்டி பரவைக்காவடி, கற்பூரச்சட்டி ஏந்தி மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் பக்தர் தீ மதிப்பர். பூவாமலே தென்னம்பாளையிலிருந்து "வி" யாகவே வெளிப்படும் அற்புத தென்னையை தன் காலடியில் கொண்டுள்ள ஏழுமுகக்காளியம்மன் ஆலயம் இரத்தோட்டை பிரதேச சபைக்குட்பட்டதாகவே விளங்குகிறது. இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலஸ்தானகோபுரம், மூன்றுதள இராஜ கோபுரம், நவக்கிரகம், வசந்த மண்டபம் என்பனவெல்லாம் ஏழுமுகக்காளியம்மனின் அருளாட்சிக்கும், நிர்வாக சபைத்தலைவர் எஸ். சந்திரசேகரம் உட்பட சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், கொடையாளர்கள் உட்பட பொதுமக்கள் சமகாலத்தில் மேற்கொண்டுவரும் ஆலயத் திருப்பணிகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். இரத்தோட்ட நகர இந்து பிரமுகர்கள் பலர் இவ்வாலயத்தின் பரிபாலனத்தை முன்னரும் சிறப்புடன் நடாத்தி உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதுகங்கை தீர்த்தத்தில் நீராடி, ஏழுமுகக்காளியம்மனைத் தொழுது, இரத்தோட்டை நகருக்கு ஏகும்போது நம்மை ஆசி கூறி வரவேற்பதைப்போல் நகரின் நுழைவாயிலில் இடது புறமாக அமைந்திருப்பது இரத்தோட்டை அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயமாகும்.

இரத்தோட்டை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயமும், ஸ்ரீ ராமர் ஆலயமும் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாகும். இரத்தோட்டை ஸ்ரீ இராமச்சந்திரன் - இராமர் ஆலயம் 1936 - இல் திருவாளர் ஒய்யவந்தன் செட்டியாரின் மைந்தன் அரியமுத்துச் செட்டியார் அவர்களினால் கட்டப்பட்டதாகும். அரியமுத்துச் செட்டியார் அவர்கள் ஓர் இராமபக்தர். தான் வேண்டிய பிள்ளைவரம் கிடைத்தபடியாலே இத் திருப்பணியினை மேற்கொண்டதாக இவரின் பரம்பரையினர் கூறுகின்றனர். இராமர் -சீதை - இலட்சுமணன்- இலட்சுமி ஆகிய அவதார தெய்வங்களுக்கு இங்கு பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெற்றுவருகின்றன. திருவாளர் அரியமுத்துச் செட்டியார் அவர்களின் இன உறவினர்களான திருவாளர் அ.ஓ.தியாகராஜா செட்டியார் உட்பட குடும்பத்தினர்களும் இன்றளவும் பல தெய்வீகத்திருப்பணிகளுக்கும் சமூகநல மேம்பாட்டுக்கும் அடக்கத்துடனும் பணிவுடனும் உதவி வருவது, 'நகரத்தார்' இந்நாட்டில், சமய கலாசார மேம்பாட்டுக்கு ஆற்றிய தொண்டின் அடிப்படையிலேயே அமைந்தது எனலாம்.

இரத்தோட்டை, இந்துதமிழ் மகாவித்தியாலயத்தில் பாலமுருகனுக்கு கோயில் அமைத்து பிரதிஷ்டை செய்துள்ளதுடன், பூஜை வழிபாடுகளையும் சிறப்பாக நடாத்தி வருகின்றனர். இத்தெய்வீகத்திருப்பணியோடு கலை,கலாசார மேம்பாட்டுக்காகவும், சமய வளர்ச்சிக்காகவும் இவ் வித்தியாலயத்தில் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை பணியாற்றிவரும் அதிபர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் பழைய மாணவர்களும், பாடசாலை மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தோடு இணைந்து பெரும் பங்காற்றி வருவது போற்றத்தக்க பணியாகும்.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் கிழக்கு நோக்கி கம்பீரமாக அமைந்துள்ள ராஜகோபுரத்தின் வலது கரையில் வழிப்பிள்ளையார், கோயில் உண்டு "அவனருளாலே" அவன்தாள் பணிந்து எனும் அருள்வாக்குக்கு ஒப்ப ஸ்தூலலிங்கமாக விளங்கும் இராஜ கோபுரத்தை தரிசித்துக் கொண்டு மனித வாழ்வில் பல படிகளைக் கடந்து, அனுபவங்களைப் பெற்று ஆன்மீக வழியில் சிறந்தே உண்மைப் பொருளை அடைய முடியும் என்பது போல் ஆலய மகா மண்டபத்தை நோக்கி, அமைக்கப் பட்டுள்ள படிகளில் இறங்கி ஆலயத்துள்ளே பிரவேசிக்கலாம்.

தற்போது கர்ப்பக்கிரகம் உட்பட உயர்ந்த விமானம், ஸ்தூபி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்தமண்டபம் என்பவற்றோடு, உள்வீதியில் சந்நிதிகள் பலவும் பலகோடிரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

இவ்வாலயத்தில் முன்பு மரத்திலான கொடிமரமே இருந்துள்ளது. தற்போது செம்பிலான அழகிய கொடிமரம் அமைக்கப்பட்டுள்ளது. இது இவ்வாலயத்திற்கு அமைந்துள்ள தனிச் சிறப்பாகும். ஆலயத்தில் நடைபெற்றுவரும் திருப்பணிகளின் பெருமைக்கு கட்டியம் கூறுவதுபோல பஞ்சமுக விநாயகர் உட்பட மும்முகப் பிள்ளையார் சிருஷ்டி கணபதி, ஏகதந்தர், துவிமுக கணபதி, பாலகணபதி, ஆகியோரின் திருவுருவங்களை, புதிதாக ஸ்தாபித்து வரும் பிரமாண்டமான தூண்களில் வடிவமைத்து வருகின்றனர். ஆலயத்தில் மூலவருக்கு வலது பக்கத்தில் சிவலிங்கப் பெருமானும், இடது பக்கத்தில் சோமசுந்தரேச மீனாட்சியன்னையும் உள்வீதியின் வலப்புற பின்பகுதியில் இலட்சுமியும் இடதுபுறத்தில் முருகனும் தனித்தனி சந்நிதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளியுள்ளனர். சித்திராபௌர்ணமியில் செல்வவிநாயகப் பெருமான் சித்திரத் தேரேறி வீதியுலா வருவார். இத் தேர்த்திருவிழாவில் இன, மத பேதமின்றி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து மகிழ்வர்.

செல்விநாயகப் பெருமான் அடியார்களுக்கு அபயமளித்து காப்பதோடு அற்புதங்கள் பலவற்றையும் காலத்துக்குக்காலம் நிகழ்த்தி பக்தர்களை மகிழ்விக்கின்றார். 1985 -1990 காலக்கட்டங்களில் ஆலயத்தின் மண்டப வாயிலில் தொங்கும் ஒரு **"டியுப் லைட்"** சிவராத்திரி தினத்தன்று மெல்ல மெல்ல ஊஞ்சல்போல் தொடர்ந்து அசைந்து ஆடத்தொடங்கியது. தினமும் மாலை பூசை ஆரம்பமானதுடன் இவ் அசைவுத் தொடங்கி சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்றது. மாலைப்பூசை மணியோடு ஆரம்பமான இவ்வசைவினைக்காண பக்தர்குழாம் படையெடுத்தது, மின்விளக்கு என்றபடியால் மின்சார பாய்ச்சலினால் "இவ்வசைவாட்டம் ஏற்படுகிறதோ" என ஐயுற்ற சிலர், மின்சார இணைப்பை துண்டித்தனர். அதன் பின்னரும் இவ்வாட்டம், வழமைபோல் நடைபெற்றது.

இரத்தோட்டை செல்வவிநாயகப் பெருமானின் திருவிளை யாடல்களில் இதுவும் ஒன்றேயாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 04

இரத்தோட்டை நகருக்கு அணிசெய்யும் குருவாவ பாலத்திற்கு கீழே வளைந்து நெளியும் சிற்றாறு "தெளிவலஓயா" என்பதாகும். "அலகொலமட" கிராமத்தின் பூர்வீகநாட்டுப்புற கதையின் நாயகனான தெளிவலபண்டாவோடு இது சம்பந்தப்பட்டதாகும்.

"தெளிவல தெய்யோ" நாட்டுப்புறக்கதை, கொடுமைமிகு உபராஜன் ஒருவனுக்கு தன் இளம் பெண்ணை தாரைவார்க்க மறுத்து, மகளை தந்தையே கொலை செய்து, தெய்வீக நிலைக்கு ஆளாக்கி வழிப்பாட்டிற்கும் உறுத்தாக்கிய கதை இதுவாகும். இதுபோல் இப்பகுதியில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டபோது, பேய்கள், பிசாசுகள், பூதங்கள், முனிகள் உட்பட தம்மைக் காத்தக் குல தெய்வங்கள், ஊர்த்தெய்வங்கள் என்பன பற்றிய சுவாரசியம் மிக்க நாட்டுப்புற கதைகள் கர்ணபரம்பரைக் கதைகள் பல இன்றும் வழக்கில் உள்ளன. இது மற்றுமன்றி தோட்ட தொழிலாளர்களின் போராட்டங்களில் முகிழ்த்த வீரமிகு வரலாற்று கதைகளும் சோகச் சித்திரங்களும் பல உள்ளன.

இன்றைய இரத்தோட்டை நகர், பூர்வீக லோங்வீல் தோட்டத்தின் பெரும் பகுதிகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இரத்தோட்டை நகருக்கு மிக அருகில் உள்ள லோங்வில் மலைகுன்று சிறுதாரங்களைக் கொண்ட இயற்கைக் காடாகும். கைக்காவளையில் பண்டைகாலத்தில் இரும்புத்தாது அகழ்ந்தெடுக்கப்பட்டு ஆயுதங்கள் செய்யப்பட்டதாக குறிப்புகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தோட்டை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெல்ஸ்பார், மினிரன் (காக்கா பொன்) டொபெஸ், டொலமைற், திருவானாகல் ஆகிய கனிப்பொருள் காணப்படுகின்றன. இப்பிரதேசம் 93 சதுரக் கிலோமீட்டர்களை கொண்டது. 54 கிரம வசமாகவும், 194 கிரமங்களாகவும் உள்ளது. 2006-ம் ஆண்டு குடிசனக் கண்கின்படி இரத்தோட்டை உதவி அரசாங்க நிர்வாகப்பிரிவில் சிங்களவர் 35023 பேரும் இலங்கைத் தமிழர் 5726 பேரும் இந்திய தமிழர் 6581 பேரும் இலங்கை முஸ்லிம்கள் 1809 பேரும் ஏனையோர் 206 பேருகளுமாவர். இதில் 34850 பேர் பௌத்த சமயத்தினர். 11600 பேர் இந்து சமயத்தை சேர்ந்தவர்கள். மக்கள் தொகையில் கிராமத்தில் 34678 பேரும் தோட்டங்களில் 9717 பேரும் வாழ்கின்றனர் என கணக்கிடப்பட்டுள்ளனர்.

மகா பாரக்கிரமபாகு, வலகம்பாகு ஆகிய சிங்கள மன்னர்களது காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த இரத்தோட்டை நகர் ஆங்கிலேயர் காலத்தில் ஒரு புதிய யுகத்தில் அடி எடுத்து வைத்தது. இரத்தோட்டையை சுற்றிய மலைகளிலெல்லாம் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று பசும் தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. தென்னிந்தியாவிலிருந்து ஆசை வார்த்தை கூறி அழைத்துவரப்பட்ட தமிழ் மக்கள் இந்த பசுமைக்காக தம் உயிரையும், உதிரத்தையும், உழைப்பையும் வியர்வையையும் சிந்தினர். ஆழப்புதைந்த தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதை மேல் ஏழைமகனும் ஏறி மிதித்து இன்றளவும் பாடுபடும் மலையகத்தமிழ் மக்கள் அன்றும் இன்றும் தெய்வம் ஒன்றே, தமக்குத் துணை என்பதை உணர்ந்து ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அன்று தோட்டங்கள் தோறும் ஐதீகமான கோயில்கள் இருந்தன. தோட்டங்களில் மட்டுமன்றி தோட்டங்களை இணைத்து நிற்கும் சிறு சந்தி குடியிருப்புகளிலும் ஆலயங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தார்கள். இந்த அடிப்படையில் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயமும் சுமார் 78 வருடகால வரலாற்று பூர்வீகத்தினைக் கொண்டதாக விளங்குகின்றது. இன்று ஆலயம் அமைந்துள்ள காணியில் இருந்த ஈரப்பலாமரத்தின் அடியில் ஒரு சிறிய கொட்டிலை அமைத்து அதில் விநாயகப்பெருமானின் திருவுருவப் படத்தை வைத்து வழிபாடு செய்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இங்கு பூஜைகள் நடைபெற்றுள்ளன.

திருவாளர் சந்தனம் சாரதி அவர்கள் இந்த ஆலய வழிபாடு நடைபெற செயல்புரிந்துள்ளார்கள். இந்நாள்கள் பிரித்தானிய ஆட்சியில் தோட்ட சாம்ராச்சியங்கள் கோலோட்சிய காலப்பகுதியாகும். ஒருகால் நூற்றாண்டுக்காலம் இச்சிறிய கோயிலில் வழிபாடு நடைபெற்றுவரும் வேளையில், 1944ம் ஆண்டு ஆலய அபிவிருத்திக்காக பொதுக் கூட்டமொன்று நடாத்தப் பட்டுள்ளது.

1945-15-11-இல் காணிவாங்க ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டதாக தெரிய வருகின்றது. 1942 வரை விநாயகரின் திருவுருவப் படத்தை வைத்தே ஆற்றப்பட்டு வந்த வழிபாடு அதன் பிறகு விநாயகரின் சிலையை பிரதிஷ்டை செய்வதற்காக சிறு மூலஸ்தானமும் ஒரு மண்டபமும் அமைக்கப்பட்டு 1945ம் ஆண்டளவில் சிலைவழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. 1945-12-30ல் தனியார் ஒருவருக்கு உரிமையாக இருந்த காணியை அக்காலத்தில் ஆலய தர்மகர்த்தாவாக விளங்கிய சண்முகம் ஆறுமுகம் சுப்பிரமணியம் மந்தண்டாவளை சோமசுந்தரம், வினாசித் தம்பி இராஜரட்னம், சின்னையா வேலாயுதம் பிள்ளை, திருவாளர் மைலர் கந்தப்பு, திருவாளர் பொன்னையா பத்மநாதன் ஆகியோரின் பெயர்களுக்கு உறுதி எழுதப்பட்டு, எதிர்காலத்தில் ஆலய நிர்வாகத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்கும் நிர்வாக சபையின் பெயருக்கும் செல்வவிநாயகர் கோயில் என்ற பெயருக்கும் பத்திரம் எழுதி கையொப்பம் இடப்பட்டது.

1946-ம் ஆண்டு இவ்வாலயத்தை மேலும் புனர்நிர்மாணம் செய்து பூஜைகள் நடாத்துவதற்காக ஒரு மகாசபைக் கூட்டம் ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் பின் காலத்துக்கு காலம் ஆலய நிர்வாகத்தையும், திருப்பணிகளையும், நடாத்துவதசற்கும் திருப்பணிகளை செய்வதற்கும் பூஜை ஒழுங்கினை மேற்கொள்ளவும் சபையினர் கிரமமாக செயற்பட்டுள்ளனர்.

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணை சித்திராபூரணையாகும். 1952-ம் ஆண்டு பூரணையில் பொங்கி வடியும் பால்நிலவைப்போல் இவ்வாலயத்தில் சித்திரா பௌர்ணமி தேர்த்திருவிழா உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு, முதன் முதலாக ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் வெளிவீதியில் தேருலா வந்துள்ளார். மலையகத்தில் ஆசிரியர் பணிபுரிந்த பலர், கல்விப்பணியோடு ஆன்மீகக் கலையெழுச்சிக்கும் வித்திட்டுள்ளனர். இந்த வகையில் திரு. பீ. பத்மநாதன் அவர்களின் தலைமையிலான நிர்வாகச் சபையினர் முன்னாள் இரத்தோட்டை இந்து கல்லூரியின் அதிபரும் ஆலய நிர்வாக சபைத் தலைவருமான திரு. வீ. சபாபதிபிள்ளை அவர்களின் வழிகாட்டலின் பேரில் ஆலயத்திலேயே மூலஸ்தானம், மகாமண்டபம், வசந்தமண்டபம் என்பவற்றையெல்லாம் புதிதாக நிர்மாணித்து 1972-ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை மிகச்சிறப்பாக மேற்கொண்டார்கள். கும்பாபிஷேக சிவாச்சாரியார்களான சிவஸ்ரீ த. காசிநாத குருக்கள், சிவஸ்ரீ விஸ்வநாத குருக்கள் ஆகியோர் குடமுழுக்குவிழாவில் கலந்து சிறப்பித்தனர். திரு. வீ. சபாபதிப்பிள்ளை அதிபர் அவர்கள் கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972-ம் ஆண்டு முக்கிய திருப்பணிகள் நடைபெற்ற ஆண்டாக குறிப்பிடப்படுகின்றது. 1976ம் ஆண்டு திருவாளர். து.கிருஷணசாமி அவர்களின் தலைமையில் நிர்வாக சபையினர் ஆலய வளவில் முன்று வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளனர். 1980ம் ஆண்களில் திருவாளர். ஆர். சண்முகம் அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினர் ஆலயத்தில் கல்யாண மண்டபம் ஒன்றினை அமைத்துள்ளனர். 1982ம் ஆண்டளவில் டாக்டர் ஆர். மகாலிங்கள் தலைமையிலான நிர்வாக சபையினர் ஆலய குருக்கள் பண்டாரம் ஆகிய பதவிகளை வகிப்பவர்களுக்கு சேவைகாலத்தில் தங்கியிருப்பதற்கு இருவீடுகளை அமைத்துள்ளனர்.

வழிப்பிள்ளையார் ஆலயமொன்றை அமைத்து 1984-ம் ஆண்டிலே ஆலயத்தை மேலும் புணரமைத்து மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தியுள்ளார்கள். திருவாளர் வீ. கதிரேசன், திருவாளர், எஸ். சண்முகவேல் ஆகியோர் 1994ம் ஆண்டுவரை நிர்வாக சபையின் தவைர்களாக தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியுள்ளார்கள்.

1994-ம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் திருவாளர் கா. கருப்பையா அவர்களின் தலைமையில் அமைந்த நிர்வாக, சபை ஆலய வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துள்ளது. இன்றளவும் நடைபெறும் பாரிய தெய்வீகத் திருப்பணிகளுக்கு செயற்திறனும் பணிவும் பண்பும் கொண்ட இச்சபையும், சபைத் தலைவருமே என்றால் அது தகும்.

1995-ம் ஆண்டு ஆலயத்திலே நவக்கிரகங்களுக்கான கோயில் அமைக்கப்பட்டு, 05-02-1995 இல் கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டதால் இப்பகுதிவாழ் மக்களுக்கு சனி விரதங்கள் உட்பட கிரியைகளை நடாத்தவும் வழிபாடுகளை நிறைவேற்றவும் ஏதுவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999-ம் ஆண்டு காலப்பகுதியில், அமரர் மாண்புமிகு தொண்டமான் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பொறுப்பினை வகித்தார். அப்போது கலாசார அமைச்சராக விளங்கிய மாண்புமிகு லக்ஷ்மன் ஜயகொடி அவர்களோடு இணைந்து மலையக தோட்டப்பகுதிகளில் கலாசார நிலையங்களை அமைக்கும் பணியினைத் தொடக்கி வைத்தார். இதன் அடிப்படையில் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டையில் ஒரு கலாசார மண்டபம் அமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையினை கலாசார அதிகாரியாகிய பணியாற்றிய மாத்தளை பெ. வடிவேலன் அவர்கள் முன்வைத்து ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கா. கருப்பையா அவர்களை சந்தித்து காணி முதலான விபரங்களை அமைசசுக்கு பெற்றுச்சென்றார். மல்லிகைத் தோட்டம், மேடான தரைத்தோட்டம் ஆகிய தடங்கல்கள் குறுக்கிட்டபோதும் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டையிலேயே தமிழர் நலனுக்காக கலாசார மண்டபம் அமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களும் அமைச்சின் செயலாளர் கலாநிதி உயர்திரு பிரதாப் இராமானுஜம் அவர்களும் இத்திட்டத்திற்கு பொறுப்பாக விளங்கிய மேலதிக செயலாளர் திருவாளர் டி. குமாரதாஸன் அவர்களும் கவனத்தில் எடுத்து அனுமதி வழங்கினர். இம்மண்டபத்திற்கு கலாசார அமைச்சு ரூபா. 500,000/= த்தை முதலில் வழங்கியது. நிர்வாக சபை ஆரம்ப வேலைகளுக்காக ரூபா. 75,000/= மேற்பட்ட தொகையினை செலவு செய்தது. தோட்ட உட்கட்டமைச்சு ரூபா. 765,000/= வழங்கியதோடு கட்டிட வேலைகளை மேற்பார்வையும் செய்தது.

இக் கலாசார மண்டபம் தொடர்பாக ஆலய அறங்காவலர் சபையின் தலைவரும், செயலாளரும், பொருளாளரும் நிர்வாக சபை உறுப்பினர்களும் இரத்தோட்டை பிரதேச சபையின் உப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவருமான. செல்லையா சுகுமாரனும் விடா முயற்சியுடன் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு வருகை தந்து தீவிரமாக பாடுபட்டனர். திருவாளர் செ. சுகுமாரன் அவர்கள் ஆற்றிய பங்கு மெச்சத்தக்கது.

இவ்வாலயத்தின் மூலவிக்கிரகமான ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் காந்தமுடையதும் மகிமைமிக்கதுமான பச்சைபாஷான கல்லினால் வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இவ்வாலயத்தில் காலை, நண்பகல் மாலை ஆகிய வேளைகளில் நித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன இதுபோல் நைமித்திய கிரியைகளும் காலத்துக்குகாலம் ஆகம விதிமுறைப்படி சிறப்பாக நடைபெறுகின்றது. மாதாந்த சதுர்த்தி திருவிழா, வைகாசி விரத பூசை, ஆடி அமாவாசை பூசை, சரஸ்வதி பூசை, கார்த்திகை பூசை, நவராத்திரி கேதார கௌரி விரதம், கந்தர் சஷ்டி விரதம் என்பன சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. கந்தர்சஷ்டியின் போது இரவு வசந்த மண்டப பூஜை சிறப்பாக நடைபெறும்.

1994-ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தலைமைப் பதவியை ஏற்று அப்பதவியில் இன்றுவரை செயற்படும் செல்வ விநாயகர் பெருமான் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் தலைவர் திருப்பணி நாயகன் கா. கருப்பையா அவர்கள் மூன்று தள இராஜகோபுரத் திருப்பணியை ஆரம்பித்து நிறைவு செய்து 22-03-2000 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடாத்தினார். இப்பகுதிவாழ் பொது மக்களும் பரிபாலன சபை உறுப்பினர்களும் அவருக்கு பக்கத்துணையாக விளங்கினார்.

பக்தி பரவசத்தினையும் பார்ப்போர் வியக்கும் வண்ணம், வண்ணகோலத்தையும் கொண்ட, இந்த இராஜ கோபுரம், மூன்று தளத்தினைக் கொண்டது. ஐந்து கலசங்கள் அமையப்பெற்ற இவ்இராஜகோபுரத்தின் விசாலமான நுழைவாயிலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமருங்கிலும் கதம் ஏந்திய கிங்கரர்கள் கோபுரத்தை தாங்கி காத்து நிற்பதுபோல் வீற்றிருக்கின்றனர். இடதுபுறமாக அமைந்துள்ள தேர் முட்டிக்கு பக்கத்தில் தேரடி வைரவர் சூலத்தோடு விளங்குகின்றார்.

இராஜகோபுரத்தின் முதலாம் தளத்தின் வலதுபக்கத்தில் சிவபெருமான், பார்வதி திருக்கல்யாண காட்சியானது விஷ்ணுபெருமான் தர்ப்பணம் செய்துகொடுக்க பிரம்மா ஓமம் வளர்க்க அழகுற சீர்மிகு சிற்பங்களினால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இடது புறததில் முருகன் திருக்கல்யாண காட்சி சிறப்பாக விளங்குகின்றது. விநாயகப்பெருமான், பூதகணங்கள் என்பனவெல்லாம் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

இராஜகோபுரத்தின் இரண்டாம் தளத்தில் நாரதர்கொடுத்த மாங்கனிக்காக பிள்ளையார், முருகன் ஆகிய இருவரும் உலகைச் சுற்றிவர எடுத்த பிரயத்தனத்தையும் அதன் உட்பொருளையும் வண்ணம் அமைந்துள்ளது. உமாதேவியார், வண்ணமயிலோடு, வடிவேலன் விநாயகர் ஆகிய திருவுருவங்கள் எழில்கொஞ்சும் வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. இடதுபக்கத்தில் முழுமுதற் பொருளாகிய சிவபெருமான், உமாதேவியாருடன் திருக்கைலா யத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியினை சிலையாகவடித்து உயிர்கொடுத்த சிற்பியின் கைவண்ணத்தை எண்ணி எண்ணி வியக்க வைக்கின்றது. அகத்திய முனிவரை சிற்பமாக தீட்டியிருக்கும் அழகே தனி அழகாகும். இராஜகோபுரத்தின் மூன்றாம் தளத்தில் பிரம்மா, லக்ஷ்மி, துர்க்கா, மாரியம்மன் ஆகிய சிற்பங்களின் சிறப்பினை எடுத்துக்கூற வார்த்தைகளே இல்லை எனலாம். நாற்புறமும் பூதங்கள், கணங்கள் காத்து நிற்கின்றனர். கோபுரத்தின் வலது பகுதியில் பிரம்மா, விஷ்ணு உட்பட தட்ஷணாமூர்த்தி கல்ஆல மரங்களின் கீழ் வீற்றிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளோடு, முனிவர்கள் தவம் செய்ய, மதுரை மீனாட்சியும் எழுந்தளியுள்ளார். கோபுரத்தின் இடதுபக்க நெடுப்பகுதியில் நடனகணபதி, லக்ஷ்மி உட்பட சரஸ்வதி, பிரம்மா ஆகிய தெய்வீகத் திருவுருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1988-02-04 வெள்ளைசாமி கதிரேசன் தலைமையில்
வி. மயில்வாகனம் (செயலாளர்)
கே. கருப்பையா (பொருளாளர்)
எஸ் ருமேந்திரன்
எஸ் தேவமணி
கே. சுப்பிரமணியம்
எம். குணசேகரன்
கே.பி. கந்ததாசன்
எஸ். ரட்ணவேல்
பி. திருலோகசங்கள்
க. கனகரட்ணம்

டி. நந்தகுமார் ஆகியோ சேர்ந்து ஆலய பரிபாலன் சபையை பொறுப்பேற்றார்கள்

1989-10-11 திருப்பணிவேலைகள் இச்சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

1989-11-01 அறநெறி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1991 மேற்படி அறநெறிப்பாடசாலை அரசினால் பதிவு செய்யப்பட்டது.

1990-08-03 பஜனை ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய பிரதமகுரு.
பிரம்மஸ்ரீ மணி சு. கைலாசநாத குருக்கள்.

## இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் நிர்வாக சபை உறுப்பினர்கள்
## (1998 முதல்)

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கா. கருப்பையா |
| செயலாளர் | : | சு. நடராஜா |
| பொருளாளர் | : | ஹ. விஸ்வநாதன் |
| உபதலைவர் | : | சு. சண்முகவேல் |
| இணைச்செயலாளர் | : | சொ. மயில்வாகனம் |
| இணைப்பொருளாளர் | : | த.நந்தகுமார் |

**உறுப்பினர்கள்:**

ஆர். இராஜகோபால்
எஸ். சாந்தகுமார்
கே. சுப்பிரமணியம்
எம் தன்பாலன்
கே.ஏ. கந்தையா
மு. வேலாயுதம்
எஸ். இளங்கோவன்
எஸ். தேவமணி
ஆர். நகுலேஸ்வரன்
கே. ரவீந்திரன்
எம். பாலகிருஷ்ணன்
வீ. பழனிவேல்
ஏ. மயில்வாகனம்
சு. மனணிக்கம்
எம். ரட்ணஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய நிர்வாக சபையின் தலைவர்களாக இருந்து பணிப்புரிந்தவர்கள்

**திருவாளர்கள்** :- எஸ்.ஏ. சுப்பிரமணியம் - ஓவசியர்
எஸ்.வீ. இராசரத்தினம்
எஸ். வேலாயுதம்பிள்ளை
எம். கந்தப்பு
வீ. சபாபதிபிள்ளை - அதிபர்
பீ. பத்மநாதன்
எஸ். ராஜி
டீ. கிருஷ்ணசாமி
ஆர். சண்முகம்
ஆர். மகாலிங்கம் - டாக்டர்
வீ. கதிரேசன்
எஸ் சண்முகவேல்
கே. கருப்பையா

**திருப்பணி சபை உறுப்பினர்கள்:**
திரு. கா. கருப்பையா
திரு. சு. நடராஜா
திரு. ஹ. விஸ்வநாதன்
திரு. சு. சண்முகவேல்
திரு. சொ. மயில்வாகனம்
திரு. த. நந்தகுமார்
திரு. எம். மோகனசுந்தரம்
திரு. வீ. சண்முககாந்தி
திரு. டி. வேலாயுதம்
திரு. எஸ் வசந்தராஜா
திரு. எஸ் கணேசன்

திரு. பீ. சத்தியானந்தம் (ஆலய கணக்காளர்)

**திருவாளர் மாரிமுத்து ஆறுமுகம் கந்தையா அவர்கள் 1946ம் ஆண்டு தொடக்கம் 1973ம் ஆண்டு வரை பண்டாரமாக கடமையாற்றியுள்ளார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயவருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, வைரவர் பூசை வரை, பதினேழு தினங்கள் விசேட பூஜைகள், சங்காபிஷேகம், சமய சொற்பொழிவுகள், தினமும் அன்னதானம், பூங்காவனம் என்பன இடம்பெற்று வெகுவிமர்சையாக நடந்தேறுகின்றது. கொடி ஊர்வலம், யானைகள், உற்சவகொடி, மங்களபொருட்களை ஏந்திவர நாதஸ்வர மேளங்கள் முழங்க இரத்தோட்டை நகரைச் சுற்றி ஊர்வலமாக வருகின்றது. அன்று இரத்தோட்டை நகர மக்கள் இல்லங்களையும், வர்த்தக நிலையங்களையும் மாவிலைத் தோரணம் உட்பட மங்கள பொருள்களால் அலங்கரித்து, நிறைகுடம், குத்துவிளக்கு, கும்பம், என்பன வைத்து கொடி ஊர்வலத்தை வரவேற்கின்றனர்.

இரத்தோட்டை பிரதேச சபையின் தலைவர் திருவாளர் டி. ஜயதிஸ்ஸ அவர்கள் கடந்த இரு வருடங்களாக இரத்தோட்டை பிரதேச சபைக்கு கொடி ஊர்வலத்தை வரவழைத்து மரியாதை செலுத்துகிறார். இன ஐக்கியத்திற்கும், சமய பொறைக்கும் இவர் காட்டும் முன்மாதிரி ஏனைய பிறராலும் பின்பற்றக்கூடியதாகும். தினமும் நடைபெறும் அன்னதானப் பணியை நிறைவேற்ற உபயகாரர்களோடு ஆலயத்தின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் தொண்டு புரியும் இளைஞர்கள்', ஆற்றும் சேவா மனப்பான்மையுடனான பணிவும், பொறுப்புணர்ச்சியும் பாராட்டி மெச்சத்தக்கது.

- கவிமணி வே. செல்வநாயகம் இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் பேரில் ஆசிரியர் விருத்தம் பாடியுள்ளார்.
- இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் திருவூஞ்சற்பதிகத்தை கரணவாய் ஆரிய திராவிட பண்டிதர் வியாகரண சிரோமணி சிவஸ்ரீ காசிநாதக்குருக்கள் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 05

## - விநாயகர் -

இந்து சமயத்தின் அறுவகை சமயப்பிரிவுகளில் ஒன்றாக காணபத்தியநெறி விளங்குகின்றது. விநாயகர் வழிபாடே சைவ மக்களிடயே முதன் முதலில் தோன்றிய உருவ வழிபாடாகும். இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும், ஜைனர்களும் கூட விநாயகப் பெருமானை விரும்பி போற்றி வழிபடுகின்றனர். வட இந்தியாவில் குப்தர்களின் காலத்திலும், அதற்குப்பின்னரும் விநாயகர் வழிபாடு பெரிதும் பரவியிருந்தது. பாரதநாட்டில் மட்டுமன்றி ஆப்கானிஸ்தான், கம்போடியா, பாளி, போர்னியா, சீனா, ஜப்பான், இத்தாலி, அமெரிக்கா, பெரு, மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலும் பண்டுதொட்டே விநாயகர் வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்தமைக்கு சான்றுகள் உள்ளன.

நாம் எக்கருமத்தை தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடனேயே தொடங்குகின்றோம். விநாயக வழிபாடு வெற்றியைத் தரும் என்பது, சகலரதும் நம்பிக்கையாகும். விநாயகப் பெருமானை வழிபடுவது மிகவும் சுலபமானது. சாணத்தில், சந்தனத்தில், மஞ்சளில் விநாயகரை அமைத்து எழுந்தருளியிருக்குமாறு செய்து அறுகம்புல்லினால், அர்ச்சித்து, அடியார் வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

“நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலை ஞானம் கற்குஞ்சரக் கன்றுகாண்” என்பது சைவசித்தாந்த அறிவுரை. விநாயகப் பெருமானது கருணை எமக்குக் கிடைத்து விட்டால் கலை, ஞானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வருந்திக் கற்கவேண்டியது ஒன்றன்று இதன் கருமத்தை விளக்குவதற்கே ஔவையார்,

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்தூமணியே நீ யெனக்குச்
சங்கத்தமிழில் மூன்றுந் தா"

என்று பாடினார்.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்னும் பாடல் பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரது பெருமையை எமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. சிவம் என்றும் மாறுபாடு எதுவும் இன்றி இருந்தபடியே அருள் பொழியும் ஆற்றல் வாய்ந்தது.

சக்தி காரியப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள் புரிவதுபோல, சிவம் சக்தியை நோக்க, சக்தி காரியப்பட்டு எழுத்துக்கள் உதயமாகின. எழுத்துக்ள் அனைத்தும் சிவசக்தி சம்பந்தமானவை. அந்த எழுத்துகளுக்குள்ளே முதன்முதலில் தோன்றியதும் எல்லா எழுத்துக்கள் தோன்றுவதற்குக் காரணமானதும் பிரணவமே. எனவே, பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரே முதன்முதலில் தோன்றிய உருவ வழிபாட்டுத் தெய்வம் எனத் தத்துவ விளக்கம் விதந்துரைக்கின்றது.

விநாயகருக்கு பல திருநாமங்கள் வழங்குகின்றன. அவையாவன, மூத்த பிள்ளையார், ஆனைமுகன், ஐங்கரன், கணபதி, கஜானகன், விக்கிணேஸ்வரன், விநாயகன், விக்கினராஜா, ஆதிமூர்த்தி, சிரேஷ்டராஜகணநாதர், கணநாதர், கணநாயகன், கணாத்தியட்சன், பாலசந்திரன், மூஷிக வாகணன், ஆகு வாகணன், அக்கிரசன், ஏரம்பன் (ஹிரம்ப) அம்பிகாதனயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய திருநாமங்களுக்கு விஷேட பொருள்களைக் காணக் கூடியதாக உள்ளது.

விடமேலான, விடலட்சணமான நாயகர் - நாயகமாய் உள்ளார். தனக்கு மேலான ஒருவர் இல்லாதவர். விடகல்வி என்ந பொருளில் - எக்கலைக்கும் தலைவர். விடதிசை என்ற பொருளில் - எத்திசைக்கும் ஈசன். விடஅறிவு என்ற பொருளில் - அவர் ஞான சொரூபி, விக்கின ஈசுவரன் - அன்போடு வழிபடுகின்ற அடியார்களுக்கு இடையூறுகளை நீக்கும் கடவுள்.

கணபதி - கண - பதி - க ஞானம், ண-மோட்சம், மோட்சம் பதி தலைவன். எனவே தன்னை அடைந்தோருக்கு ஞானத்தினால் மோட்சத்தை கொடுக்கும் தலைவராய் உள்ள பரப்பிரம்ம சொரூபி.

ஹிரம்ப - ஏரம்ப, வழி - திக்கற்ற - எளிய எம்மை காப்பாற்றுவார். எனவே பெரியவர்களைக் காப்பாற்றுபவர்.

பிள்ளையார் என்றும் பிள்ளையாகவே, பிரம்மச்சாரியாகவே இருப்பார்.

இப்படி ததுவம் கொண்ட விநாயகப் பெருமானை துதித்து வழிபடுவோர் வாழ்வில் இன்னல்கள் அகன்று ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறுவதோடு, மறுமையிலும் சுபீட்ச இன்பகரமான வாழ்வைப் பெறுவார்கள் என்பது ஞான முனிவரினதும், தத்துவஞானிகளினதும் ஒருமித்த கருத்தாகும்.

விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கரங்கள். ஒரு கையில் மோதகம் ஏந்தியிருக்கிறார்; அது தனக்கு. இன்னொருகையில் கொம்பை முறித்து வைத்திருக்கிறார்; அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்காக வைத்திருக்கின்றார். துதிக்கையில் இந்திர கலசம் வைத்திருக்கின்றார். அதனைத் தந்தை-தாயாருக்குப் பாதபூஜை செய்வதற்காக வைத்திருக்கின்றார். மற்றய இரு கரங்களிலும் அங்குசமும், பாசமும் வைத்திருக்கின்றார். ஆணவமாகிய யானையை பாசத்தால் கட்டி அங்குசத்தினால் அடங்குவதற்காக வைத்திருக்கின்றார். ஆன்மாக்களாகிய எமக்காக அவர் இரு கரங்களை வைத்திருப்பது அவருக்கு எம்மீதுள்ள கருணையை விளக்குகின்றது.

"ஓம் கணபதி" என்ற மந்திரத்தை காலை, மாலை செபம் செய்து வந்தால் இஷ்ட சித்திகள் கிடைக்கும். அருணகிரியார், முருகப்பெருமானுக்கு ஞானமாலையொன்று சாத்த வேண்டுமென்று நீண்ட நாள்களாக ஆசை கொண்டிருந்தார். அந்த ஆசையை நிறைவேற்றி வைக்குமாறு விநாயகப்பெருனிடம் பின்வருமாறு மேண்டுதல் செய்கின்றார்.

**"செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே**
**பஞ்சக்கரவானை பதம் பணிவாம்"**

ஐங்கரமும், ஒரு கொம்பும், யானை வயிறும் அவர் முழுமுற் பொருளென்னும் தத்துவத்தை விளக்கும்.

ஐந்துகரங்களும் படைத்தல் முதலிய பஞ்சகிருத்தி யங்களை உணர்த்தும் அவர் தேவரோ எனில் தேவருமல்லர். யானை முகத்துடைமையால் அவர் விலங்கோஎனில் விலங்குமல்லர். யானை வயிறுடைய வராதலால் பூதரோ எனில் பூதருமல்லர். வேறு என்னவோஎனில் அவர் உலக சராசரங் களுமாய், அவற்றிற்கு அப்பாலுமாய் மனம் வாக்குக்கு எட்டாப் பரம்பொருளே. இந்த உண்மையை விநாயகப் பெருமானின் திருவுரு விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனின் உருவத்தில் முகம் ஓம்கார வடிவை உணர்த்தி நிற்கிறது. நான்கு கரங்கள் வானவர் இயல்பையும், மத்தளவயிறும், குறுகிய கால்களும் பூத இயல்பையும், கொம்பின்றி இருப்பது பெண் இயல்பையும், கொம்புடன் கூடிய பகுதி ஆண் இயல்பையும் குறிப்பிடுகின்றன. தலைக்குமேல் அ்.றிணையான விலங்கு இயல்பையும் உடல் உயர்திணையான மனித இயல்லைபயும் காட்டி நிற்கின்றன. உலகமெங்கும் நீக்கமற நிற்கும் திருவுரு இவருரு என அறியமுடிகின்றது.

விநாயகனின் வடிவங்கள் பல விதமானவை குழந்தை வடிவினன் பால கணபதி, வாலிப பிள்ளையார்- தருண கணபதி, சித்தி, புத்தி ஆகிய சக்திகளை இணைத்த நிற்பவன் - சக்தி கணபதி எனவும், நின்ற நிலையில் பிரசன்ன கணபதி எனவும், நடனமாடுவன் நர்த்தன கணபதியுமாகும்.

புலவர்கள் நூல்களை எழுதும் பொழுது முதலில் பிள்ளையாருக்கு காப்பு செய்கின்றனர். முதலாம் இராஜராஜன் எடுப்பித்த தஞ்சை பெரிய கோயில் விநாயகரை பற்றி, "பரிவா ஆலயத்துப் பிள்ளையார்" என்று ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவருக்கு வாழைப்பழமே படையலாக படைக்கப்பட்டது. அக்கல்வெட்டில் இருந்து தெரியவருகின்றது தஞ்சை பெரியகோயிலில் நாள்தோறும் பிள்ளையாருக்கு வாழைப்பழங்கள் நிவேதனம் செய்யும் பொறுப்பை நான்கு குடியிருப்புகளில் வாழ்ந்த வியாபாரச்செட்டியார்களான நகரத்தாரிடம் சோழ மன்னன் ஒப்படைத்ததுடன் அதற்கு மானியமாக 360 காசுகளை வழங்கியுள்ளார். காரைக்குடிக்கு அடுத்து பிள்ளையார்பட்டியில் பாறைக்குன்றில் குடைவரைக் கோயிலில் புடைப்புச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் உருவமே காலத்தால் முந்திய தெய்வமென கூறுவோரும் உளர்.

ஆவணி மாதம் வளர்ப்பிறை 4ம் நாள் (சுக்லபட்ச சதுர்த்தி) விநாயகசதுர்த்தி கொண்டாடப்படுகின்றது. சித்தி விநாயக விரதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கஷ்டஹர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் என்ற மூன்றும் காந்தம் முதலிய புராணங்களில் கூறப்படுவனவைகாளாகும். சித்தி விநாயக விரதம் காரியசித்தியை பெறுவதற்காகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இருபத்தொரு அறுகம் புற்காளாலும் பூசித்து, இருபத்தொரு கொழுக்கட்டைகளை நிவேதனம் செய்து இதன்போத விநாயகரின் அருளைப் பெறுவர்.

சங்கஷ்டஹர சதுர்த்தி விரதமானது சிறப்பாக நோய், கடன், சிறைவாசம் இவ்ற்றின் அம்சங்களிலிருந்தும், வனவாசம் முதலிய துன்பங்களிலிருந்தும் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய ஒருவர் நோற்கும் விரதமாகும். இதனைக் கிருஷ்ணன் தருமருக்கு வனவாச காலத்தில் உபதேசித்தாக பாரதம் கூறுகின்றது.

தூர்வாகணபதி விரதம் வளர்பிறை சதுர்தியில், சிறப்பாக ஆவணி மாதச்சதுர்த்தியிலோ, கார்த்திகைமாத சதுர்த்தியிலோ அனுஷ்டிப்பர். சந்ததியை அடைவதற்காகவும், செல்வத்தைப் பெறுவதற்காகவும் இதனை நோற்பர்.

ஓம் என்ற சொல் இறைவனை உணர்த்தும் சொல். ஓங்காரம் இறைவனை உணர்த்தும் ஒலி. ஓம் என்ற சொல்லை தியானித்தால் பேரின்பநிலை எய்தலாம். ஓங்கார ஒலி உயிர்க் குற்றங்களை அகற்றுகின்றது. இறைவனடியில் ஆன்மாவை சேர்ப்பிக்கின்றது. ஓங்காரத்தை உச்சரித்தால் உச்சரித்தவர் உயர்வுறுவார். உயர்ந்தகதியை அடைவார். ஓம் என்பது பிரணவம். இந்த பிரணவமே வேதத்தின் மூலம் ஓம் என்ற ஒலியின் வடிவமே பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார். பிள்ளையார் குற்றங்களை நீக்குவபர். துண்பங்களை நீக்குபவர். இடையூறுகளை போக்குபவர்.

வி+நாயகன் என்றால் வேறு தலைவன் இல்லாதவர் என்பது பொருள். நமது வாழ்க்கை மனித வாழ்க்கை. உயிரானது ஒருபுறம் இறைவனது தொடர்பை நாடுகிறது. இறைவனது திருவடிகளை அடைந்து பேரின்ப பெருவாழ்வை அடைய முயல்கிறது. மறுபுறத்தில் உயிரினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்து உலாகாயத வாழ்வில் ஈடுபடுத்துகின்றன மலங்கள். இதனால் துன்பங்கள் ஏற்படுகின்றன. குற்றங்கள் வருகின்றன. வினைக்கு உரியதாகின்றது உயிர்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் அறிவை மயக்குகின்றன. புத்தியைக் கலக்குக்கின்றன. புலன் ஐந்தின் வழி அறிவை மயங்கவைக்கின்றன. இந்த மயக்கத்திலிருந்து விடுபட வேண்டும் இந்த மாயை நம்மைவிட்டு அகல வேண்டும். அறிவு தெளிவாக இருக்கவேண்டும். சிந்தனை இறைவன் தனக்காக வேண்டும். இறைவனால் நாம் ஆற்கொள்ளப்படல்வேண்டும்.

பிள்ளையார் மலங்களில் பிடியிலிருந்து விடுவிப்பவர். வாழ்க்கையில் புலன்கள் வழிவரும் துன்பங்களிலிருந்து விடுவிப்பவர். பிள்ளையாரை வழிபட்டால் துன்பங்கள் நீங்கும். ஓங்கார ஒலியுடன் இணைந்தவர் பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார்.

துன்பங்கள், துயரங்கள் இடையூறுகள் வல்வினைகள், அச்சங்கள், அபாயங்கள், ஆபத்துகள் வரும்பொழுதே நாம் பிள்ளையாரை நினைக்கின்றோம். ஓங்கார வடிவானவரையே நினைக்கின்றோம். விக்கினம் தீர்க்கும் விநாயகனை வேண்டுகின்றோம். வேதத்தின் முழுபொருளை உள்ளத்தில் இருத்துகின்றோம். ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவரை வழுத்துகின்றோம். துன்பங்கள் வந்தபின்பு வழிபடுதைவிட துன்பங்கள் வரும் முன்பும் வழிபடுகின்றோம். வருமுன் காப்பவர் பிள்ளையார். இதனால் எந்த செயலில் ஈடுபடும் முன்பும் பிள்ளையாரை வணங்குகின்றோம். செய்யப்போகும் செயல் அறிவுத்தெளிவுடனும், சிந்தனை கூர்மையுடனும் மயங்காமலும் அதன்வழி புலன்களாலும் மயக்கப்படாமல் இருக்கப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.


நமது புலன்வழி நமக்கு புதிய துன்பங்கள் வரக்கூடாது. நமது முன்வினைவழி நமக்கு துன்பபங்கள் ஏற்படக்கூடாது. நமது வினைகள் நல்வினைகளாக வேண்டும். நாம் செய்யும் செயல்கள் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செயல்களாகவேண்டும். தீவினைகள் நம்மை அனுகாதிருக்கப் பிள்ளையார் நமக்கு அருள்புரிகிறார். நம்மால் நமக்கு துன்பங்கள் ஏற்படக்கூடாது. பிறரால் நமக்கு துன்பங்கள் ஏற்படக்கூடாது. ஊழ் வலிவுபெற அதன்வழி நமக்குத் துன்பங்கள் வரக்கூடாது. இம்மூன்றுவழிகளிலும் துன்பங்கள் வராமல் காப்பவர் பிள்ளையார். ஓங்கார ஒலியின் உண்மை வடிவிலான பிள்ளையார் ,உயிர் உயர்வுற அருளுகின்றார்.

## லக்ஷ்மி விநாயக யந்திரம்




## சக்தி நாயக யந்திரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பக்தி இலக்கியங்களில் விநாயகப் பெருமான்

* தேவாரம் - பிடியதன் உருவுமை கொளமிகுகரியது
  **திருஞான சம்பந்தர்**

* மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
  **கபில தேவ நாயனார்**

* மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை
  **அதிராவடிகள்.**

